வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 01.08.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 234 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## முல்லைத்தீவு காணி சுவீகரிப்புக்கு எதிராக யாழ். பல்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!

*யாழ்ப்பாணம், ஓக. 01*

முல்லைத்தீவு - அக்கரைவெளி காணி சுவீகரிப்புக்கு எதிராக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக நேற்று மாலை 4 மணியளவில் ஒன்று கூடிய பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் இடம்பெற்றது.

15

## இலங்கையின் அரசமைப்பையே தீயிட்டு எரிக்கும் நிலை ஏற்படும்!

### எச்சரிக்கின்றார் சிவாஜிலிங்கம்

*யாழ்ப்பாணம், ஓக. 01*

இலங்கை அரசியல் அமைப்பையே தீயிட்டு எரிக்கும் நிலை ஏற்படலாம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

13 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவது தொடர்பாக நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்கள் விரும்பும் தீர்வினை நாங்கள் வழங்க முடியாது என்று



அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். இலங்கை அரசியல் அமைப்பில்

15

# ரணிலை மீண்டும் நாங்கள் ஜனாதிபதியாக்கமாட்டோம்!

## பொதுஜன பெரமுன திட்டவட்டம்



கொழும்பு, ஓகஸ்ட் 01

“2024இலிருந்து 2029வரை நாம் அவரை ஜனாதிபதியாக்கப் போவதில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் மட்டும், பேச்சுவார்த்தை நடத்துமாறு நாம் அவருக்கு அழைப்பு விடுக்கிறோம்.”

-இவ்வாறு தெரிவித்துள்ளார் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன.

15




## அரசியல் தீர்வை வலியுறுத்தி யாழில் நேற்றுப் போராட்டம்!

*யாழ்ப்பாணம், ஓக. 01*

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் தமிழ் மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வு பயண 100 நாள் செயற்பாட்டின் ஒரு வருடப் பூர்த்தியை முன்னிட்டும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை நோக்கிய பயணத்துக்கு வலுச் சேர்க்கும் வகையிலும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பழைய பூங்கா முன்பாக இந்தப் போராட்டம் நடைபெற்றது. இதன்போது பொது மக்களுக்கு வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவால் தயாரிக்கப்பட்ட மக்கள் பிரகடனம் விநியோகிக்கப்பட்டது. (அ)

## இந்திய தூதுவருடன் இன்று தமிழ் எம்.பிக்கள் சந்திப்பு!

*கொழும்பு, ஓக. 01*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பயணத்தை முடித்து நாடு திரும்பியுள்ள நிலையில், தமிழ் எம்.பிக்களுடன் இலங்கைக்கான இந்திய தூதுவர் அவசர சந்திப்பொன்றை நடத்தவுள்ளார்.

இரா.சம்பந்தன் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் இச்சந்திப்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

15

## பெற்றோலின் விலை 20 ரூபாவால் உயர்வு

*கொழும்பு, ஓக. 01*

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருளின் விலையில் அதிரடி மாற்றம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி 92 பெற்றோல் 20 ரூபாயால் அதிகரித்து 348 ரூபாயாகவும், 95 பெற்றோல் 10 ரூபாய் அதிகரித்து 375 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஒட்டோ டீசல் 2 ரூபாய் குறைந்து 306 ரூபாயாகவும் சுப்பர் டீசல் 12 ரூபாய் அதிகரித்து 358ஆகவும் மண்ணெண்ணெய் 10 ரூபாய் குறைந்து 226 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ)

## சமஷ்டிக் கட்டமைப்பில் அதிகார பகிர்வு அவசியம்

### வலியுறுத்துகிறார் சுமந்திரன்

*கொழும்பு, ஓக. 01*

1956 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு தேர்தலிலும் வெளிப்படுத்தப்படும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு இணங்க, சமஷ்டி கட்டமைப்பில் அதிகாரப் பகிர்வு இருக்கவேண்டும் என்பதே தமது நிலைப்பாடாகும் என



15

## மகிந்த ராஜபக்ஷ என்பவர் விற்கவே முடியாத குப்பை!

### சாடுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

*கொழும்பு, ஓக. 01*

மகிந்த ராஜபக்ஷ என்பவர் விற்க முடியாத குப்பைக் கூடமாகிவிட்டார். இனியும் இவரை வைத்து அரசியல் செய்ய முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.



15

## அமெரிக்க தூதுவராக ஜூலி சங் தொடர்வார்

*கொழும்பு, ஓக. 01*

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் வொசிங்டனுக்கு மீள அழைக்கப்படவில்லை என்று கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

டிசெம்பரில் ஜூலி சங் மீண்டும் அமெரிக்காவுக்கு



15

## தேசிய கீதத்தால் வெடித்த சர்ச்சை

*கொழும்பு, ஓக. 01*

லங்கா பிரீமியர் லீக் தொடரின் ஆரம்ப விழாவில் இலங்கையின் தேசிய கீதத்தின் பொருள் மாறும் வகையில், புதிய பாணியில், இசைக்கப்பட்டமை தொடர்பில், தற்போது பல விமர்சனங்கள் எழுந்துள்ளன.

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் படி,

15

## இப்படியும் நடக்கிறது

சில தினங்களுக்கு முன்னர், பாராளுமன்றத்தில் ஆளும்தரப்பு எம்.பி. சுரேன் ராகவன் உரையாற்றியபோது, தமிழ் மக்கள் சமஷ்டியை விரும்பவில்லை என்றும் வடக்கில் ஆளுநராக இருந்தவன் என்றவகையில் தான் இதனை கூறுவதாகவும் தெரிவித்திருந்தது வாசகர்கள் அறிந்தது தான்.

தான் ஆளுநராக இருந்தபோது ஏதோ தமிழ் மக்களுடன் நெருங்கி பழகியது போலவும், அவர்களின் மனநிலையை தான் அறிந்து வைத்திருப்பவர் போலவும் சுரேன் ராகவன் பேசியமை ஆச்சரியத்துக்குரியதல்ல. கடந்த பாராளுமன்ற தேர்தலில் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட அவர் முயற்சி செய்ததாக அப்போது சில செய்திகள் வெளிவந்திருந்தன. அதற்காக தனது நண்பர் சுமந்திரனுடன் அவர் பேசி வந்ததாகவும் அப்போது அந்தச் செய்திகள் தெரிவித்திருந்தன.

தமிழ் மக்களின் மனநிலையை தெரிந்து வைத்திருந்ததாலேயே அவர் கூட்டமைப்பில் போட்டியிட விரும்பியிருக்கலாம்.

அவரது இந்த பேச்சுக்கு பதிலளித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மறுநாள் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது, ‘துணிவு இருந்தால் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் சமஷ்டியை விரும்புகிறார்களா இல்லையா என்று வாக்கெடுப்பு ஒன்றை நடத்துங்கள்” என்று சவால் விடுத்திருந்தார்.

அவ்வாறு அவர் சவால் விடுத்து ஆற்றிய உரையின் காணொலி ஒன்றை நண்பர் ஒருவர் நேற்று பகிர்ந்திருந்தார்.

என்ன ஒருபேச்சு. தனக்கே உரிய பாணியில் கஜேந்திரகுமார் பேசினார் என்பதை விட கர்ஜித்தார் என்று சொல்வதே பொருத்தமானது.

ஒரு காலத்தில் அவரது தந்தையார் குமார் பொன்னம்பலத்தை ‘சிங்கத்தின் கோட்டையில் கர்ஜிக்கும் புலி” என்று கூறப்படுவதுண்டு.

எந்தவித தயக்கமும் இன்றி, தனக்கு சரி என்றுபட்டதை துணிச்சலுடன் தெற்கில் கூறுபவர் குமார் பொன்னம்பலம். கஜேந்திரகுமாரின் பேச்சைக் கேட்டபோது குமார் மனக்கண்ணில் வந்து போனதை தவிர்க்க முடியவில்லை.

அதுவல்ல நாம் இன்று சொல்ல வருவது.

இந்த காணொலியை அனுப்பியிருந்த அந்த நண்பர் கூடவே தனது யோசனையையும் எழுதியிருந்தார்.

“ தமிழ் மக்கள் சமஷ்டியை விரும்புகிறார்களா என்று வாக்கெடுப்பு நடத்த தயாரா என்று அவர் சுரேன் ராகவனிடம் சவால் விடுத்திருந்தார். ஆனால் அவர் அதற்காக ஏன் ராகவனிடம் சவால் விடுத்தார் என்பது தெரியவில்லை.

இந்த நாட்டில் அடுத்து நடக்கவிருப்பது ஜனாதிபதித் தேர்தல்தான் என்பது ஏற்கனவே உறுதியாகிவிட்ட ஒன்று. தமிழ் மக்களின் வாக்குகளை இலக்கு வைத்து இப்போதே பலரும் பிரசாரத்தை தொடங்கிவிட்டனர். ரணில் விக்கிரமசிங்க, தான் ஒருவரே தமிழர் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வைத்தரக்கூடிய ஒருத்தர் என்று தமிழ் மக்களை நம்பவைப்பதற்கான முயற்சியை தொடங்கிவிட்டார்.

இந்த நேரத்தில் வடக்கு கிழக்கு மக்கள் தமது அரசியல் அபிலாசையாக வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டிக் கட்டமைப்பைத்தான் எதிர்பார்க்கிறார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கஜேந்திரகுமார் போட்டியிடுவதன் மூலம் நிரூபித்துக் காட்டலாமே.”

நண்பரின் அந்தக் கோரிக்கையும் நியாயமானதாகவே இருந்தது. ஏற்கனவே கஜேந்திரனின் தந்தை குமார் பொன்னம்பலமும் இதேகோரிக்கையை முன்வைத்து ஒரு தடவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டவர்தானே.

**- ஊர்க்குருவி.**

# சிறைச்சாலைகளில் சாவை தழுவிய அரசியல் கைதிகளின் நினைவேந்தல்





யாழ்ப்பாணம், ஓக. 01

இலங்கை சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் சாவினைத் தழுவிய தமிழ் அரசியல் கைதிகளின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

குரலற்றவர்களின் குரல் பணியிடத்தில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில்,

பொதுச்சுடரினை தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தான தலைவர் ஆறு திருமுருகன் ஏற்றி வைத்தார்.

அதனையடுத்து மலர் மாலையை யாழ். மறை மாவட்டக் குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் அணிவித்தார்.



தொடர்ந்து, மலரஞ்சலி நிகழ்வும் அதன்பின், நினைவுச் சுடரும் ஏற்றிவைக்கப்பட்டதுடன் நினைவுரைகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில், சர்வமதப் பிரதிநிதிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், முன்னாள் போராளிகள், விடுதலையான அரசியல் கைதிகள்,சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# இது சிங்கள-பௌத்தர்களின் நாடு எங்கும் புத்தர் சிலை வைப்போம்!

## வீரசேகர மீண்டும் சீற்றம்

கொழும்பு, ஓக. 01

“இலங்கை பௌத்த - சிங்கள நாடு. இங்கு எங்கும் புத்தர் சிலைகளை வைத்து வழிபடுவதற்கு உரிமையுண்டு. அதை எவரும் தடுக்க முடியாது.”

- இவ்வாறு பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவை மீறி புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“குருந்தூர் மலையில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் விகாராதிபதியிடமும், மறவன்புலவு சச்சிதானந்தத்திடமுமே கேட்க வேண்டும். ஆனால், இலங்கை சிங்கள - பௌத்த நாடு. புத்தர் சிலைகளை எங்கும் வைத்து வழிபடுவதற்கு உரிமையுண்டு. அதை யாராலும் தடுக்க முடியாது.” - என்றார். (அ)

# சர்வகட்சிக் கூட்டம் தொடர்பில் மக்களைக் குழப்ப வேண்டாம்!

## எதிரணிகளிடம் ரணில் கோரிக்கை

கொழும்பு, ஓக. 01

“சர்வகட்சிக் கூட்டம் தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்து மக்களிடத்தில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம்.”

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிரணிகளிடம் கோரியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டிய சர்வகட்சிக் கூட்டம் ஏமாற்று நடவடிக்கை என்று எதிரணிகள் விமர்சித்து வருவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சிகள்தான் மக்களை ஏமாற்றி அரசியல் பிழைப்பு நடத்தி வருகின்றார்கள். எனக்கு அப்படியான செயல்களில் ஈடுபடவேண்டிய அவசியம் இல்லை. எனினும், ஜே.வி.பி. மற்றும் கஜேந்திரகுமாரின் கட்சி தவிர்ந்த ஏனைய எதிர்க்கட்சிகள் சர்வகட்சி மாநாட்டுக்கு வந்தமை எமது பயணத்தில் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுகின்றது. விமர்சனங்களை முன்வைத்து மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (அ)

# ஹெரோயினுக்கு அடிமையான யாழ். இளைஞர் கந்தக்காட்டில்!

## புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டார்

யாழ்ப்பாணம், ஓக. 01

உயிர்கொல்லி ஹெரோயினை ஊசி மூலம் பயன்படுத்திய 21 வயதான இளைஞர் ஒருவர் நீதிமன்றப் பணிப்புக்கு அமைவாக கந்தக்காடு புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிர்கொல்லி போதைப்பாவனைக்கு இளைஞர் அடிமையானதையடுத்து வீட்டார் பொலிஸாருக்கு முறையிட்டுள்ளனர். பொலிஸார் இளைஞனை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது உயிர்கொல்லி போதைப்பாவனைக்கு அடிமையானவர் என்பது தெரியவந்துள்ளது.

இதையடுத்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் ஊடாக அவரைக் கந்தக்காடு புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

ஈழநாடு
Eelanadu
01.08.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எதுவரையில் வெளியாரின் ஈடுபாடு?

இலங்கைக்கான நோர்வே தூதரகம் முற்றிலுமாக மூடப்படுகின்றது. இலங்கை மற்றும் மாலைதீவு தொடர்பான விடயங்களை, இந்தியா விலுள்ள நோர்வே தூதரகமே கையாளவுள்ளது. நோர்வே என்பது ஒரு காலத்தில் அனைத்து தமிழர்களாலும் விருப்பத்துடன் உச்சரிக்கப்பட்ட ஒரு பெயர். எரிக் சொல்ஹெய்ம் வருவதும், போவதுமே, இலங்கையின் பிரதான செய்தியாக இருந்தது. 2005இல், இலங்கையின் இரண்டு தரப்புக்களும் யுத்தத்தை தெரிவு செய்தபோது, நோர்வேயின் ஈடுபாடு முடிவுக்கு வந்தது. அதன் பின்னர் இலங்கையில் நோர்வேயின் அனுபவங்கள் தொடர்பில் அவ்வப்போது பேசப்பட்டது. பின்னர் நீண்ட காலத்திற்கு பின்னர், மீளவும் நோர்வே நினைவுக்கு வந்தது, எரிக் சொல்ஹெய்ம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகராக நியமிக்கப்பட்டபோதுதான்.

2009இல் யுத்தம் மோசமான அழிவுகளுடன் முற்றுப்பெற்ற போது, ஒரு பகுதி தமிழ் புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் நோர்வேயின் மீதான அதிருப்தியை வெளிப்படுத்தினர். யுத்தத்தின்போது, மக்களை பாதுகாக்கும் கடப்பாட்டை நோர்வே கருத்தில்கொள்ளவில்லை யென்று குற்றம் சாட்டினர். எங்களுடைய பணி இரண்டு தரப்புகளும் அமைதியை விரும்பும் வரைக்கும்தான் - அவர்கள் யுத்தத்தின் மூலம் தீர்வை காண விரும்பினால் அதன் பின்னர் எங்களால் என்ன செய்ய முடியும்? - என்று கூறி நோர்வே கைவிரித்தது.

இறுதி யுத்தத்தின்போது , ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளராக இருந்த கோடன் வைஸ், அண்மையில், நாடு கடந்த அரசாங்கம், முள்ளிவாய்க்கால் நிகழ்வில், நினைவுப் பேருரை நிகழ்த்தியிருந்தார். அவரது பேச்சின் உள்ளடக்கம்? ரணில் விக்கிரமசிங்க அனுபவமுள்ள அரசியல்வாதி. அவருடன் பேசி பிரச்னைகளை தீர்க்க முயற்சிக்க வேண்டுமென்று, புலம்பெயர் சமூகத்திற்கு அறிவுரை கூறியிருந்தார். அவர் தனது, இறுதி யுத்த அனுபவங்களை முன்வைத்து, 'கூண்டு' என்னும் பெயரில் ஒரு நூலையும் வெளியிட்டிருந்தார். இது போன்ற விடயங்கள் என்னைப் போன்ற ஒருவரை பாதிப்பதில்லை - இது முற்றி லும் அந்த மக்களுக்குரியது. நான், எனது வீட்டு மொட்டை மாடியிலிருந்து, அடுத்த நூலுக்கான குறிப்புக்களை எடுத்துக் கொண்டிருக்கின்றேன் என்றார். ஒரு வெளியுலக இராஜதந்திரியின் எல்லை இவ்வளவுதான். இதில் கவலைப்படுவதற்கும், ஆதங்கப்படுவதற்கும், விமர்சிப்பதற்கும் எதுவுமில்லை.

இராஜதந்திரிகள் வருவார்கள், செல்வார்கள். அத்துடன் அவர்களது பணி முடிந்துவிடும். பிரச்னைகளிலிருந்து விடுபடுவது, பாதிக்கப்பட்ட சமூகமொன்றின் ஆற்றலில் தங்கியிருக்கின்றது. சூழ்நிலையை புத்தி சாதுரியமாக கைக்கொள்வதிலிருந்து, ஒவ்வொரு சமூகங்களும் அதற் கான நன்மையை பெற்றுக் கொள்கின்றன. சந்தர்ப்பங்களை புத்திசாது ரியமாக கைக்கொள்பவர்கள் முன்னோக்கி பயணிக்கின்றனர் - மாறாக, தவறவிடுபவர்களே, மற்றவர்கள் மீது குற்றம்சாட்டிக் கொண்டு, காலத்தை கடத்திக்கொண்டிருக்கின்றனர். இன்று தமிழ் மக்கள் வந்து சேர்ந்திருக்கும் இடமும் இதுதான். தங்களுக்கான தேவையை சொல்லத் தெரிந்திருக்கும் அரசியல் தலைமைகள் என்போருக்கு, எவ்வாறு அதனை நோக்கிச் செல்வதென்று தெரியாமல் இருக்கின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில், தமிழ் மக்கள் சார்பாக இந்தியாவே கையெழுத்திட்டது. இந்த பின்புலத்தில்தான், இந்தியா மட்டும் சில விட யங்களை கூறிவருகின்றது. தவிர, இந்தியா ஓர் உடனடி அயல்நாடாக இருப்பதும் இதற்கான காரணமாகும். எனவே சந்தர்ப்பங்களை பயன் படுத்திக் கொள்ளும் தந்திரம் பழகுவதில்தான், தமிழர்கள் முன்னோக்கி பயணிக்க முடியும். எனவே வெளித்தலையீடுகள் ஓர் எல்லைக்குட்பட்டது. அது தொடர்ந்தும் தமிழ் மக்களுடன் கூடப் பயணிக்காது. இதனை புரிந்து கொண்டு, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளுதல் என்னுமடிப்படையில் விடயங்களை நோக்கவேண்டும். ஒரு வேளை காற்றின் வேகத்திற்கு ஏற்பவே விடயங்கள் சாத்தியப்படலாம். காற்று நாம் விரும்புகின்றமாதிரி சுழன்றடிக்கவேண்டுமென்று அடம்பிடித்துக் கொண்டிருப்பது புத்தி சாலித்தனமானதல்ல.

# பெரமுன கப்பலை புயலிலிருந்து காப்பாற்றிய மாலுமியே ரணில்!

## கூறுகிறார் திலும் அமுனுகம



கொழும்பு, ஒக. 01

பொதுஜன பெரமுன என்ற கப்பலை கடல் புயலில் இருந்து காப்பாற்றிய மாலு மியே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் பொல்கஹவெல தொகுதி நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற் றும் போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

பொதுஜன பெரமுன என்ற கப்பல் புயலில் சிக்கிய போது, கப்பலை ரணில் விக்கிரமசிங்க என்ற மாலுமியிடம் ஒப்படைத் தோம். கப்பலை புயலில் இருந்து மீட்டு அதில் பய ணித்தவர்களை ஜனாதிபதி காப்பாற்றியுள்ளார்.

நாம் புயலில் இருந்து மீண்டுள்ளதால் மாலுமியை தூக்கி கடலில் எறிய தயாரில்லை. "பொதுஜன பெரமுன" கப்பலை காப் பாற்றிய மாலுமி ரணிலுக்கு உரிய சிகிச்சையை அளிக்க தயாராக உள்ளோம்.

அடுத்த ஜனாதிபதி தேர் தலில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராக வருவாரா என சிலர் கேட் கின்றனர். அது குறித்து தேர்தல்வரும் சந்தர்ப்பத் தில் உரிய தீர்மானத்தை மேற்கொள்வோம்.

அரசாங்கம் சரியான பாதையில் பயணிக்கிறது. நாட்டை பொருளாதார நெருக்கடியில் மீட்டுள் ளோம் - என்றார். (அ)

## குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஒக. 01

புலோலி அறிவகம் சன சமூக நிலையத்தின் 68ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இரத்த தானம் முகாம் நடைபெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் நிலை யத்தின் மண்டபத்தில் நடை பெறும் இந்த நிகழ்வில் அனை வரையும் பங்கேற்று குருதிக் கொடை வழங்குமாறு ஏற்பாட் டாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ)

## செல்வச்சந்நிதி ஆலய பெருந்திருவிழா!

வடமராட்சி, ஒக. 01

வரலாற்று பிரசித்தி பெற்ற வடமராட்சி தொண்டைமா னாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த பெருந்திரு விழா எதிர்வரும் 16ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

காலைத் திருவிழா எதிர் வரும் 20ஆம் திகதி ஆரம்ப மாகும். இதில், எதிர்வரும் 25ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும், மறுநாள் கைலாய வாகனத் திருவிழாவும் நடைபெறும்.

29ஆம் திகதி மாலை 6 மணிக்கு சப்பைரதத் திருவிழா வும் மறுநாள் 30ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர்த் திரு விழாவும் அடுத்தநாள் 31ஆம் திகதி காலை 7 மணிக்கு தீர்த் தத் திருவிழாவும் நடைபெற வுள்ளன. (ஐ)

## ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

திருமலை, ஒக. 01

திருகோணமலை, துறைமுக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவரை கைது செய்தாக துறைமுகப்பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்தின் அடிப்படையில் குறித்த நபரை சோத னைக்கு உற்படுத்திய வேளையில் சந்தேகநபர் மறைத்து வைத்திருந்த 210 மில்லிகிராம் ஐஸ் போதை பொருள் கைப் பற்றப்பட்டதாக துறைமுகப்பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் ஏறாவூர்-2, அம்பாறை பிரதேசவாசி எனவும் சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட போதைபொருளையும் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதா கவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## 'மலையகம் 200 தாயகத்தின் பக்கங்கள்' விசேட கலந்துரையாடல் இன்று!


யாழ்ப்பாணம், ஒக. 01

"மலையகம் 200 - தாய கத்தின் பக்கங்கள்" என்ற தலைப்பிலான சமூக விஞ் ஞானப் படிப்பு வட்ட விசேட கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு கே. கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை யின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாட லில் தொடக்க உரையை தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும் தாயகம் சஞ்சிகையின் பிர தம ஆசிரியருமான க. தணிகாசலம், கருத்துரைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனக ராஜ், யாழ்ப்பாணப் பல்க லைக்கழக மாணவர்களான ஆர். பேபிசாலினி, கே. புவனேஸ்வரன் ஆகியோ ரும் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து சபையோ ரின் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடல் நடைபெறும். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். பழைய சிக்கல்கள் தீரும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப்பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். அதிகாரிகளுடன் ஈகோபிரச்னை வந்து நீங்கும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

**மிதுனம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும்.

**கடகம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக்கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**சிம்மம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். குடும்பத்தில் உங்கள் கைஓங்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கன்னி**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர்செய்வீர்கள். தாயாருக்கு மருத்துவ செலவுகள் வரக் கூடும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும்.

**துலாம்**
உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். உடல்நலம் சீராகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**மகரம்**
எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். வாகனம் பழுதாகும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் புதுஒப்பந்தங்களால் லாபம் பெருகும். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

**மீனம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதித்துக் காட்டும் நாள்.

# தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் தலைமை பதவியில் மாற்றம்!

## அறிவிப்பு இவ்வாரம் வெளியாகும்

சென்னை, ஓக. 01

தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் தலைவர் மாற்றப்படவுள்ளார் என்றும் புதிய தலைவர் குறித்த அறிவிப்பு இந்த வாரத்தில் வெளியாகும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

காங்கிரஸ் கட்சியின் தலைவரான மல்லிகார்ஜுன கார்கே தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் முக்கிய தலைவர்களுடன் ஓக. 4இல் ஆலோசனை நடத்த உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நடைபெறவுள்ள 2024 மக்களவைத் தேர்தல் மற்றும் இந்த தேர்தலில் காங்கிரஸின் தொகுதிப் பங்கீடு தொடர்பாக இன்று செவ்வாய்க்கிழமை முதல் காங்கிரஸ் கட்சி தேசிய அளவில் ஆலோசனையை தொடங்குகிறது. இந்த ஆலோசனையில் ஒவ்வொரு மாநிலத்தைச் சார்ந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகளும் பங்கெடுக்க உள்ளனர்.

அந்த வகையில் ஓகஸ்ட் 4ஆம் திகதி டில்லியில் தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் முக்கிய தலைவர்களுடன் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே ஆலோசனை நடத்தவுள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் தலைவரின் பதவிக் காலம் 3 ஆண்டுகாலம் என்றாலும், 4 ஆண்டுகளை கடந்தும் கே. எஸ். அழகிரி பதவியில் உள்ளார். தமிழ்நாட்டில் இருந்து கடுமையான அழுத்தங்கள் கொடுக்கப்பட்ட போதும், கே. எஸ். அழகிரி தலைவராக நீடித்து வருகிறார்.

இந்நிலையில், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தெரிவு போட்டியில் செல்வகுமார், ஜோதிமணி ஆகியோர் முன்னிலையில் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாராளுமன்றத் தேர்தலில் பிரதமர் மோடி இராமநாதபுரத்தில் போட்டியிட வேண்டும்!

## மக்களின் விருப்பு இது என்கிறார் அண்ணாமலை

இராமேஸ்வரம், ஓக. 01

பிரதமர் நரேந்திர மோடி இராமநாதபுரத்தில் போட்டியிட வேண்டும் என மக்கள் விரும்புவதாக நடைபயணத்தின்போது பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

அண்ணாமலையின் 'என் மண், என் மக்கள்' நடைபயணத்தை இராமேஸ்வரத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைத்தார்.

நடைபயணத்தில் ஈடுபட்டுள்ள அவர் நேற்று முன்தினம் நடத்திய மக்கள் சந்திப்பில் பேசுகையில்,

2024ஆம் ஆண்டில் பா. ஜ.



க. மீண்டும் வெற்றிபெற்று மோடி 3ஆவது முறையாக ஆட்சிக்கு வர வேண்டும். கடந்த 9 ஆண்டுகால ஆட்சியில் ஏழை மக்களுக்காகவே மோடி பணியாற்றி வருகிறார். 2 ஆண்டுகால தி. மு. க. ஆட்சியில் இராமநாதபுரத்தில் எதுவும் நடைபெறவில்லை. மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

வறட்சி மாவட்டமாக உள்ள இராமநாதபுரத்தின் குறைகளைத் தீர்க்க பிரதமர் மோடி இங்கு போட்டியிட மக்கள் விரும்புகின்றனர். வரும் மக்களவைத் தேர்தலில் இராமநாதபுரம் தொகுதியில் இருந்து பா. ஜ. க. வேட்பாளர் மக்களவைக்கு செல்ல வேண்டும்.

தமிழகத்தில் குடும்ப ஆட்சி நடந்து வருகிறது. தமிழக இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி தவித்து வருகின்றனர். பிரதமர் மோடி 10 இலட்சம் பேருக்கு வேலை வழங்கப்படும் என்றார். இதுவரை 5.5 லட்சம் பேருக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது - என்றார்.

(ஐ)

# மணிப்பூர் வன்செயல்களால் இந்தியாவுக்கு தலைகுனிவு

## நாம் தமிழர் சீமான்

சென்னை, ஓக. 01

மணிப்பூரில் நடந்த பாலியல் வன்கொடுமை சம்பவம் உலக அரங்கில் இந்தியாவுக்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறினார்.

மணிப்பூர் வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து, நாம் தமிழர்கட்சி சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே நேற்று முன்தினம் மாலை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமை வகித்தார்.


பின்னர், செய்தியாளர்களிடம் சீமான் கூறியவை வருமாறு,

மணிப்பூரில் பழங்குடியினப் பெண்கள் இருவரை ஆடையின்றி சாலையில்இழுத்துச் சென்று, பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி உள்ளனர்.

அங்குள்ள குக்கி பழங்குடியின மக்களுக்கு எதிரான வன்முறைச்சம்பவங்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. இது உலக அரங்கில் இந்தியாவுக்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது. மலைப் பகுதிகளில் உள்ள வளங்களைக் கொள்ளையடிக்கவே, இதுபோன்ற பல்வேறு சம்பவங்களை நிகழ்த்துகின்றனர். மணிப்பூர் கலவரத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும்.

நெய்வேலி நிலக்கரி சுரங்க விரிவாக்கத்துக்காக, தமிழகத்தில் விளைநிலங்களை அழித்து வருகிறது என்எல்சி நிறுவனம். விவசாய நிலத்தைப் பாழ்படுத்தி, மின்சாரம் தயாரித்து, அதை விவசாயிகளுக்கு வழங்குவதில் என்ன பயன்? எனவே, சுரங்க விரிவாக்கத் திட்டத்தை உடனடியாக கைவிட்டு, விளை நிலங்களை மீண்டும் விவசாயிகளிடமே ஒப்படைக்க வேண்டும்.

வேல் யாத்திரையால், சட்



டப்பேரவையில் பா. ஜ. கவுக்கு இடம் கிடைக்கவில்லை. அ. தி. மு. கவுடன் கூட்டணி வைத்ததால்தான், பா. ஜ. கவுக்கு 4 தொகுதிகள் கிடைத்தன. ஏதாவது கோயிலுக்கு வேண்டிக் கொண்டு பாத யாத்திரை சென்றால், புண்ணியமாவது கிடைக்கும். அண்ணாமலையின் யாத்திரையால் என்ன நடக்கப் போகிறது? இந்த பாதயாத்திரை மக்களுக்கு எந்தப் பலனையும் கொடுக்கப் போவதில்லை - என்றார்.

(ஐ)

# மலையக மக்களின் பிரச்னைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டும்!

## முருங்கன் பகுதி மக்கள் வலியுறுத்து

**மன்னார், ஒக. 01**

**"மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும். அவர்களுக்கான காணி உரிமை உட்பட பாத யாத்திரை ஊடாக முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து கோரிக்கைகளுக்கும் ஆதரவு வழங்குவோம்."**

*-இவ்வாறு மன்னார், முருங்கன் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.*

*தலைமன்னாரிலிருந்து, மாத்தளை வரையான 'மலையக மக்களின் 'எழுச்சி' பயணம் நேற்று மூன்றாவது நாளாகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.*

*தலைமன்னாரில் நேற்றுக் காலை 5 மணிக்கு ஆரம்பமான பாத யாத்திரை முற்பகல் 11 மணியளவில் முருங்கன் வந்தடைந்தது.*

*மலையக தமிழர்களுக்கும் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும், காணி உரிமை அவசியம், பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும் என்பன உட்பட 10 பிரதான கோரிக்கைகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. அந்த கோரிக்கைக்கு மக்கள் தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.*



*குறித்த பாத யாத்திரை ஒகஸ்ட்12 ஆம் திகதி மாத்தளையை சென்றடையவுள்ளது.*

*இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம், சிவில் அமைப்புகள் மற்றும் மலையக சமூகம்சார் செயற்பாட்டாளர்களை உள்ளடக்கிய "மாண்புமிகு மலையக மக்கள்" கூட்டிணைவினால் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*கடந்த 28 ஆம் திகதி அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது. 29 ஆம் திகதி முதல்தான் பாத யாத்திரை இடம்பெற்றுவருகின்றது.*

*(அ)*

# நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விசேட கூட்டம்

*கொழும்பு, ஒக. 01*

*சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழு கூடவுள்ளது.*

*குறித்த கலந்துரையாடல் இந்த வாரம் நடைபெறும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.*



*இது குறித்து விரைவில் விவாதம் நடத்துமாறு சபாநாயகர் மஹிந்த யப்பா அபேவர்தனவிடம் கோரிக்கை விடுக்க உள்ளதாகவும் அவர் கூறினார்.*

*(அ)*

# உலகம் முழுக்க வாழும் இலங்கையின் கண்கள்

*கொழும்பு, ஒக. 01*

*ஜப்பான், எகிப்து, பாகிஸ்தான், தாய்லாந்து, மலேசியா, சிரியா உள்ளிட்ட 57 நாடுகளின் 117 நகரங்களில் பார்வையற்றோருக்கான கண்களை இலங்கையர்கள் தானம் செய்துள்ளதாக இலங்கை கண் மருத்துவர் சங்கத்தின் சிரேஷ்ட முகாமையாளர் ஜகத் சமன் மாதராராச்சி தெரிவித்தர்.*

*இந்த வருடம் கடந்த சனிக்கிழமை வரை 57 நாடுகளைச் சேர்ந்த 1767 பேருக்கு பார்வை வழங்குவதற்கு இலங்கையர்கள் பங்களித்துள்ளதாக இலங்கை கண் மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.*

*இலங்கையிலுள்ள கண் வைத்தியர்களின் பரிந்துரைகளின்படி, 541 இலங்கையர்கள் தங்கள் கண்களை தானம் செய்துள்ளனர்.*

*மேலும், இலங்கையர்கள் கண் தானம் செய்வதற்கு அதிகூடிய விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளதாகவும், 22 இலட்சம் இலங்கையர்கள் கண் தானம் செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.*







# அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழா

*வடமராட்சி, ஒக. 01*

*யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் தேர் உற்சவம் நேற்று மிக மிகச் சிறப்பாக இடம்பெற்றது.*

*நூற்றுக்கணக்கான பக்தர்கள் புடை சூழ விநாயகப் பெருமான் முன்னே செல்ல முருகப்பெருமான் அடுத்துவர பின்னால் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் பெரிய சித்திர தேரில் வலம் வந்தார்.*

*மங்கையர்கள், ஆடவர்கள், சிறுவர்கள் என பலரும் வடம் பிடிக்க முத்தேரும் வீதியுலா வந்தது.*

*இதேவேளை அடியார்கள் தூக்குக்காவடி, தீச்சட்டி, கர காட்டம் அங்க பிறதட்டை, பால் காவடி போன்ற நேர்த்திகளையும் நிறைவு செய்திருந்தனர்.*

*நேற்றைய தேர்த்திருவிழாவிலே வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலொரிந்தும் வடமராட்சியின் பல்வேறு அடியார்கள் கலந்து கொண்டனர். (அ-02)*

# அராலியில் மணல் கொள்ளை! டிப்பரை மடக்கி பிடித்த மக்கள்!!

*யாழ்ப்பாணம், ஒக. 01*

*கடல் நீர் உட்புகாத வகையில் வயல் வெளிகளை அண்டிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மண் மேடுகளில் இருந்து சட்ட விரோதமான முறையில் மண்ணை வெட்டி எடுத்துச் சென்ற டிப்பர் வாகனங்களில் ஒரு வாகனத்தைப் பொதுமக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.*

*அராலி பகுதியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் ஒடம்பெற்றது.*

*அராலிப் பகுதியில் கடற்கரையை அண்மித்த பகுதிகளில் உள்ள வயல் வெளிகளுக்குள் கடல் நீர் உட்புகாத வகையில் மணல் மேடுகள் அமைக்கப்பட்டுள்ளன.*

*குறித்த மணல் மேட்டில் உள்ள மணலை நேற்று முன் தினம் 5 டிப்பர் வாகனங்களில் வந்தவர்கள் அகழ்ந்து டிப்பரில் ஏற்றிக்கொண்டு இருந்தவேளை வயல் வேலைக்கு சென்றவர்கள் அவர்களிடம் அது குறித்து கேட்டுள்ளனர்.*

*தாம் அனுமதி பெற்று, வட்டுக்கோட்டை பொலிஸாருக்கும் அறிவித்துவிட்டு தான் மணல் அகழ்கின்றோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.*

*அவர்களின் நடத்தையில் சந்தேகம் கொண்ட வயல் வேலைக்குச் சென்றவர்கள், கிராம சேவையாளருக்கும், ஊர் இளைஞர்களுக்கும் அறிவித்துள்ளனர்.*

*அதனை அடுத்து அங்கு சென்ற கிராம சேவையாளரும், சில இளைஞர்களும் அவர்களிடம் அனுமதிப் பத்திரத்தை கோரியபோது அதனை எடுத்துக் காட்டுவது போன்று பாசாங்கு செய்து டிப்பர் வாகனங்களை இயக்கித் தப்பி ஓடினர்.*

*அதில் ஒரு டிப்பர் வாகனத்தை இளைஞர்கள் மடக்கிப் பிடித்து வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.*

*கடலை அண்டிய பகுதிகளில் எமது வயல் நிலங்கள் இருப்பதனால் மழை காலங்களில் கடல் நீர் வயல்களுக்குள் உட்புகாதவாறு மணல் மேடுகள் அமைத்துள்ளோம். அதனை இவ்வாறு சட்டவிரோதமான முறையில் வெட்டி எடுத்து சென்றால் வயல்களுக்குள் கடல் நீர் உட்புக கூடிய அபாயம் உள்ளது.*

*அவ்வாறு வயல்களுக்குள் கடல்நீர் உட்புகுந்தால் வயல்கள் எல்லாம் பயிர் செய்ய முடியாத நிலங்களாக மாறி விடும். அது மாத்திரமன்றில் ஊரினுள் இருக்கும் நீர் நிலைகளும் உப்பு நீராக மாற கூடிய அபாயம் உள்ளது.*

*கடல் நீர் உட்புகாத வகையில் அமைக்கப்பட்ட மணல் மேட்டை வெட்டியவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தப்பி சென்றவர்களையும் கைது செய்ய வேண்டும். என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (அ)*

# 50 இலத்திரனியல் பஸ்கள் மிக விரைவில் இறக்குமதி!

*கொழும்பு, ஒக. 01*

*50 மின்சார பஸ்களை இறக்குமதி செய்ய போக்குவரத்து அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.*

*ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மானியத்துடன் பஸ்கள் இறக்குமதி செய்யப்படும் என சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். கொழும்பு நகருக்குள் மின்சார பஸ்களை இயக்குவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை கடந்த மாதம் அனுமதி வழங்கியது.*

*வெளியேறும் புகையால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் அதிகரித்து வரும் எரிபொருள் விலையின் தாக்கம் ஆகிய இரண்டையும் குறைக்கும் முயற்சியில் இந்த முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.*

*முதற்கட்டமாக கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் இந்த பஸ்கள் இயக்கப்படும் எனவும், ஏனைய பிரதேசங்களின் புவியியல் நிலைமைகளின் அடிப்படையில் விரிவுபடுத்தப்படும் எனவும் கெமுனு விஜேரத்ன கூறினார்.*

*மலையகம் மற்றும் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்படும் பகுதிகளில் தாழ்தள மின்சார பஸ்களை இயக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.*

*இதேவேளை, பஸ்களில் டிஜிற்றல் ரிக்கெட் அமைப்பு பொருத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)*

# 100 இலட்சம் வாக்குகளை தேர்தலில் பெறுவார் ரணில்

## வஜிர அபேவர்தன நம்பிக்கை

கொழும்பு, ஓக. 01

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் 100 இலட்சம் வாக்குகளை பெற்றுக் கொள்வார் என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.**

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி 100 இலட்சம் வாக்குகளை பெற்றுக் கொள்வார் என்பதில் எவ்வித சந்தேகமும் எமக்கு கிடையாது. நாடு வங்குரோத்து அடைந்துவிட்டதாக பலர் குறிப்பிட்டபோதிலும் ரணில் விக்ரமசிங்க நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டு எடுத்து வருகிறார். இன்னும் ஒரு மாத காலப்பகுதியில் வங்குரோத்து நிலையிலிருந்து முழுமையாக நாட்டை மீட்க முடியும். சிலர் தேர்தல் நடத்தவில்லையா எனக் கேள்வி எழுப்புகின்றனர். தேர்தல் நடத்தியதனால் தான் மக்கள் வீதியில் வரிசையில் காத்திருக்க நேரிட்டது. எனினும், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் நூறு இலட்



சம் வாக்குகளைப் பெற்று வரலாற்று ரீதியான வெற்றியை ஈட்டுவார்-என்றார். (அ)

# ரூபாவின் பெறுமதி உயர்வு

கொழும்பு, ஓக. 01

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி கடந்த வாரத்தில் 10.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

அத்துடன், ஏனைய வெளிநாட்டு நாணய அலகுகளுக்கு நிகராகவும், ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

எனினும் இது கடந்த காலங்களில் வீழ்ச்சி போக்கை பதிவு செய்திருந்தது.

கடந்த வாரத்தில் ஜப்பானிய யென் 15.9 சதவீதமாகவும் ஸ்ரேலிங் பவுண்ஸ் 3.8 சதவீதமாகவும் இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# 2024 இல் 3 தேர்தல்கள்!

கொழும்பு, ஓக. 01

மூன்று தேர்தல்கள் நடைபெறவுள்ளதால் 2024 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக இருக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் அடுத்த வருடம் நடத்தப்படும் என விஜேவர்தன கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தொம்பே தொகுதிக் குழுக் கூட்டத்தில் நேற்று முன் தினம் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ)

# இந்த வருடத்தில் 37 பேர் டெங்கினால் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 01

இந்த வருடத்தில் டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 37ஆக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவரை 56,228 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், அதில் 27, 883 பேர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணத்தில் அதிகூடிய டெங்கு நோயாளர்கள், கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன், அந்த மாவட்டத்தில் 12,154 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் காரணமாக, கடந்த 2022 ஆம் ஆண்டின் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடையும் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் நளின் ஆரியரத்ன தெரிவித்தார். (அ)

# சிறுநீரகச் சத்திர சிகிச்சையின் பின்னர் உயிரிழந்த சிறுவன் குறித்து விசாரணை!

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு, ஓக. 01

கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் சிறுநீரக சத்திரசிகிச்சையின் பின்னர் மூன்று வயது சிறுவன் உயிரிழந்தமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

என்ன நடந்தது என்பது குறித்து முழுமையாக ஆராயமால் பாதிக்கப்பட்டவர்களும் மருத்துவத் தரப்பினரும் முடிவுக்கு வருவது தவறு என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் சமில் விஜயசிங்க தெரிவித்தார்.

இதன் காரணமாக மரணத்திற்கான காரணம் என்னவென்பதை அறிவதற்காக முழுமையான விசாரணைகள் இடம்பெற வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உயிரிழந்த சிறுவனின் குடும்பத்தவர்கள், மருத்துவர்களின் கவனமின்மையே உயிரிழப்புக்கு காரணம் என தெரிவித்தனர்.

பாதிக்கப்படாத சிறுநீரகமே அகற்றப்பட்டது என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர் எனவும் பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# மானிப்பாய் பகுதியில் சிக்கிய கடலாமைகள்

யாழ்ப்பாணம், ஓக. 01

மானிப்பாய் நகர்பகுதியில் சட்டவிரோதமான முறையில் நான்கு கடலாமைகளை பட்டா ரக வாகனத்தில் கொண்டு சென்ற இருவரை மானிப்பாய் பொலிஸார் நேற்று காலை கைது செய்துள்ளனர்.

மானிப்பாய் நகர்பகுதியில் வீதிபோக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்தவேளை மானிப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி மில்றோய் உட்பட்ட போக்குவரத்து பொலிஸார் பட்டா ரக வாகனமொன்றை வழிமறித்து அதில் இருந்த சாக்கினால் கட்டப்பட்டிருந்த மூடைகளைச் சோதனையிட்டனர்.



அதில் இருந்த 4 கடலாமைகளை பொலிஸார் உயிருடன் கைப்பற்றினர்.

இதனையடுத்து 47 மற்றும் 32 வயதான கொழும்புத்துறை மற்றும் இளவாலைப் பகுதியைச் சேர்ந்த இருவரை கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

குறித்த நபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

விசாரணையில் இளவாலை, கீரிமலை கடற்பரப்பில் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட ஆமைகள் குருநகர் பகுதிக்கு விற்பனைக்குக் கொண்டு செல்லப்பட்டதாக தெரியவந்துள்ளது. (அ)

# வைத்தியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்குவதற்கு ஜனாதிபதி இணக்கம்!

கொழும்பு, ஓக. 01

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் வைத்தியர்களுக்கான கணிசமான சம்பள அதிகரிப்பை வழங்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பளப் பிரச்னை காரணமாக பல வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறத் தூண்டப்பட்டுள்ளதாகச் சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஹரித அளுத்கே சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரி



விக்கும்போதே வைத்தியர் ஹரித அளுத்கே மேற்கண்டவாறு கூறினார். (அ)

# அரிசியைப் பயன்படுத்தி பியர் தயாரிப்பதை நிறுத்துமாறு விவசாய அமைச்சு ஆலோசனை

கொழும்பு, ஓக. 01

விலங்கு தீவனம் மற்றும் பியர் தயாரிப்புகளுக்கு அரிசியை பயன்படுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, அந்த அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்கவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதன்படி, விலங்கு தீவனத்துக்கும் பியர் தயாரிப்புக்களுக்கும் அரசி பாவனை இடைநிறுத்தி அறிவிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என விவசாய அமைச்சர் தெரிவித்தார்.

சில பிரதேசங்களில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக எதிர்காலத்தில், ஏற்படக்கூடிய உணவுத் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை போக்குவரத்துச் சபை பணியாளர்கள் வேலைநிறுத்தம்!

கொழும்பு, ஓக. 01

தாக்குதல் சம்பவத்தை முன்னிறுத்தி இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பல டிப்போக்களின் பணியாளர்கள் வேலைநிறுத்தத்தை ஆரம்பித்துள்ளனர்.

தம்புள்ளை, அனுராதபுரம், கெக்கிராவ, ஹொரவபொத்தான, பொலன்னறுவை, கெபதிகொல்லாவ மற்றும் கந்தளாய் ஆகிய டிப்போக்களின் பணியாளர்களே பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

ஹொரவபொதான டிப்போவின் பரிசோதகர் ஒருவரை தனியார் பஸ் ஒன்றுக்கு அழைத்துச் சென்று தாக்கிய சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து இந்த பணிப்புறக்கணிப்பு இடம்பெறுகின்றது.

திடீர் வேலைநிறுத்தம் காரணமாக நேற்றுக் காலை பல்வேறு தேவைகளுக்காக பயணிக்கவிருந்த பயணிகள் பலர் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ)

# அமைச்சரவைத் தீர்மானத்தையும் மீறி சிங்களவர்களுக்குக் காணிகள் பகிர்வு!

## கொக்குத்தொடுவாயில் அரசு அடாத்து

முல்லைத்தீவு, ஓக. 01

**மகாவலி 'எல்' வலயத்தினுள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளைக் கையேற்கும் நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலும் அதனையும் மீறி கொக்குத்தொடுவாய் அக்கரைவெளியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமாகவிருந்த ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் சிங்களவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.**

மகாவலி 'எல்' வலயத்தினுள் கரைதுறைபற்று பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள 6 கிராம அலுவலர் பிரிவுகள் கொண்டுவரப்பட்டுள்ளன. அவற்றைப் பிரதேச செயலகத்திடமிருந்து மகாவலி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இந்த முயற்சி தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் எதிர்ப்பையடுத்து நிறுத்தப்பட்டது. அமைச்சரவையிலும் மேற்படி நடவடிக்கையை இடைநிறுத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.



இந்தநிலையில் கொக்குத்தொடுவாய் அக்கரைவெளியில் 30 ஏக்கர் வீதம் சுமார் ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் மகாவலி அதிகார சபையால் சிங்களவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இந்தக் காணிகள் 1984ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமானவையாக இருந்துள்ளன.

இந்தக் காணிகளில் உள்ள பற்றைகளை கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் சிங்களவர்கள் துப்புரவு செய்ய முற்பட்டபோதே காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்கள் தெரியவந்துள்ளன.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியின் மேலதிக செயலர் தலைமையில் இடம்பெற்ற 'சூம்' கலந்துரையாடலில் மகாவலி அதிகார சபையின் நடவடிக்கை தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மகாவலி அதிகார சபையின் தலைமை அலுவலக அதிகாரிகள் அவ்வாறான நடவடிக்கை இடம்பெறவில்லை என்று மறுத்துள்ளனர்.

எதிர்வரும் 3ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்படவுள்ளது. (அ)

### பத்திரிகையாளர் மீது தாக்குதல்

# சம்பந்தப்பட்ட சகலரிடமும் விசாரணை நடத்தப்படும்!

கொழும்பு, ஓக. 01

ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர பொலிஸாரால் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்ட சம்பவத்தில் தாங்கள் உடனடியாக தலையிட்டதாக தெரிவித்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, வழக்குடன் தொடர்புடைய அனைவரையும் விசாரணைக்கு அழைக்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

உடுவரகெதர கைது செய்யப்பட்டு பொரளை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்ட சிறிது நேரத்தின் பின்னர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் குழுவொன்று நிலையத்திற்குச் சென்று அவரது உடல் நிலை குறித்து விசாரித்ததாக தெரிவித்துள்ளது.

மனித உரிமை ஆணைக்குழு பொரளை பொலிஸ் பொறுப்பதிகாரியைச் சந்தித்து ஜீப்பில் வைத்து பொலிஸாரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் உடுவரகெதரவை நீதித்துறை வைத்திய அதிகாரிக்கு அனுப்புமாறு பரிந்துரைத்ததாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் தொடர்புடைய தரப்பினரிடமிருந்து அறிக்கைகளை பெறும். சம்பந்தப்பட்ட அனைத்து நபர்களையும் விசாரணைக்கு அழைக்கும்" என்று அந்த அறிக்கை கூறுகின்றது.

இதேவேளை, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் உடுவரகெதர நேற்று முன் தினம் மாலை கருத்துத் தெரிவிக்கையில்,

எனது வலது கண் பரிசோதனையின் அறிக்கை இன்னும் வரவில்லை. அதன் முடிவுகளின் அடிப்படையில் நான் வீடு திரும்புவது குறித்து மருத்துவர்கள் முடிவு செய்வார்கள்-என்று அவர் கூறினார். (அ)

# 7 மாதங்களில் 65 மருந்துகள் பாவனையில் இருந்து நீக்கம்

கொழும்பு, ஓக. 01

ஓராண்டில் தர குறைபாடுகள் காரணமாக 65 மருந்துகள் பயன்பாட்டிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவற்றில் இந்திய கடன் உதவியின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மருந்து ஒன்றும் உள்ளதாக அதன் மேலதிக செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

தரமான பிரச்னை காரணமாக பயன்பாட்டிலிருந்து விலக்கப்பட்ட மருந்துகளில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 6 மருந்துகளும் உள்ளடங்குவதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# வீதித்தடை இரும்புகளை திருடி விற்கும் போதை ஆசாமிகள்!

கொழும்பு, ஓக. 01

வீதித்தடைகளில் பொருத்தப்பட்டிருந்த இரும்புக் குழாய்கள் மற்றும் இரும்பு கிளிப்புகள் திருடப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட மேல்மாகாண தெற்கு மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர், திருட்டில் ஈடுபட்ட போதைக்கு அடிமையான இருவரை கைது செய்துள்ளனர்.

பாராளுமன்றத்தை நோக்கி வரும் போராட்டக்காரர்களை தடுப்பதற்காக சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு முன்பாக இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த தடுப்புச் சுவர்களில் இருந்து திருடர்கள் இரும்புக் குழாய்களை அகற்றியுள்ளனர். திருடப்பட்ட ஜிஐ குழாய்களின் மதிப்பு ரூ. 2.8 மில்லியன் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் ஊழல் ஆட்சியாளர்களுக்கு எதிராக வெடித்த பொதுமக்கள் போராட்டங்களையடுத்து, இராணுவம் மற்றும் பொலிசார் இந்த தடையை ஒரு வருடமாக பயன்படுத்துகின்றனர்.

கடந்த மே மாதம் முதல் போதைப்பொருள் பாவனையாளர்களால் குழாய்கள் ஒவ்வொன்றாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவத்தினரால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டு வெலிக்கடை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டதாக மேல் மாகாண தெற்கு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

இந்த இரும்புக் குழாய்களை பகல் நேரத்திலும், இரவிலும் யாரும் கண்டுகொள்ளாத நிலையில் திருடர்கள் திருடிச் சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருடர்கள் இரும்புக் குழாய்களை எடுத்துச் செல்வதைக் பொலிஸ்கூட பார்த்ததாகச் சிலர் கூறுகின்றனர்.

இந்த இரண்டு சந்தேக நபர்களும் 44 ஜி.ஐ குழாய்களை மட்டுமே திருடியதாக பொலிஸாரிடம் கூறியுள்ளனர்.

திருடப்பட்ட 28 குழாய்கள் பல்வேறு நபர்களுக்கும் பழைய உலோகக் கடைகளுக்கும் விற்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் அத்துல் கோட்டை மாளிகாவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் 50 மற்றும் 35 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# நீதிமன்ற ஆவணங்களை விழுங்கிய சட்டத்தரணியிடம் உமிழ்நீர்ப் பரிசோதனை

கொழும்பு, ஓக. 01

நீதிமன்றப் பெட்டகத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட அத்தியாவசிய ஆவணங்களின் இரண்டு பிரதிகள் கிழித்து மென்று தின்னப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பெண் சட்டத்தரணியை நாளை வரை விளக்கமறியலில் வைக்க கெக்கிராவ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்ற ஊழியர்கள் முழுச் சம்பவத்தையும் வீடியோ எடுத்து கெக்கிராவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து சட்டத்தரணி பொலிஸாரால் வியாழக்கிழமை மாலை கைது செய்யப்பட்டார்.

ஆவணங்களில் உள்ள உமிழ்நீர் பெண் சட்டத்தரணியினுடையது தானா என்பதை உறுதிப்படுத்த சந்தேகிக்கப்படும் சட்டத்தரணியின் இரத்த மாதிரிகளை பெற்றுக்கொள்வதற்காக அவரை அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் ஆஜர்படுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கெக்கிராவ மாவட்ட நீதிமன்றத்தில் தமக்கு எதிராக விசாரிக்கப்பட்டு வரும் வழக்கு தொடர்பான அசல் ஆவணங்களை சட்டத்தரணி மென்று விழுங்க முயற்சித்ததாகக் கூறப்படுகிறது.

சந்தேகத்திற்குரிய சட்டத்தரணிக்கும் மேலும் பல தரப்பினருக்கும் இடையிலான காணி தொடர்பான வழக்கு கெக்கிராவ மாவட்ட நீதிமன்றில் நிலுவையில் உள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

நீதிமன்றத்துக்கு முன்னாலுள்ள கட்டடமொன்றை பெண் சட்டத்தரணி தனது அலுவலகமாக பயன்படுத்துகிறார். அதனை மீளப்பெற உரிமையாளர் முயன்றபோது சர்ச்சை ஆரம்பித்தது.

15 இலட்சம் ரூபா கொடுத்து அதை வாங்கிவிட்டதாக பெண் சட்டத்தரணி மன்றில் ஆவணம் சமர்ப்பித்தார். கட்டட உரிமையாளர் மறுத்தார்.

பெண் சட்டத்தரணி சமர்ப்பித்த ஆவணத்திலுள்ள கையெழுத்து உண்மையானதா என பரிசோதிக்க அரசாங்கப் பகுப்பாய்வாளரிடம் ஆவணங்களை அனுப்ப நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசாங்கப் பகுப்பாய்வாளரினால் சான்றளிக்கப்பட்ட ஆவணங்கள் வந்துள்ளதை அறிந்ததும், நீதிமன்றப் பதிவாளர் அறைக்கு சென்று, இரண்டு ஆவணங்களையும் வலுக்கட்டாயமாக எடுத்துச் செல்ல முற்பட்டதையடுத்து நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அதனைத் தடுக்க முற்பட்டபோது சந்தேக நபர் உரிய ஆவணங்களை வாயில் திணித்து மென்று தின்றுள்ளார். எவ்வாறாயினும், நீதிமன்ற உத்தியோகத்தர்களால் ஆவணங்களின் சில பகுதிகளை கண்டுபிடிக்க முடிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சுகாதாரத் துறை மேம்பாடு தொடர்பான செயலமர்வில் பங்கேற்க அனுமதி மறுப்பு

கொழும்பு, ஓக. 01

அமெரிக்கா வொசிங்டனில் நடைபெறவுள்ள சுகாதாரத்துறை முதலீடு மற்றும் மேம்பாடு தொடர்பான செயலமர்வில் பங்கேற்க நிதி அமைச்சின் அதிகாரிகள் குழுவுக்கு ஜனாதிபதி செயலகம் அனுமதி மறுத்துள்ளது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்த செயலமர்வில் கலந்துகொள்வதற்காக நிதியமைச்சின் பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த 8 அதிகாரிகளின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

சுகாதாரத் துறை திட்டமிடல் மற்றும் திட்டங்களில் பணிபுரியும் அதன் அதிகாரிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்த செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த விஜயத்திற்கான அனுமதியை நிராகரித்த ஜனாதிபதி செயலகம், சுகாதாரத்துறை தொடர்பான செயலமர்வுகளின்போது, தூதுக்குழுவில் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் எவரும் இல்லாமையை சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## பறக்கும் தட்டு, வேற்றுக்கிரகவாசிகள் உண்மைதானா?

# அமெரிக்க நாடாளுமன்றத்தில் 3 முன்னாள் விமானிகள் சாட்சியம்!




பொதுவாக யுஎஃப்ஓ என்று அழைக்கப்படும் அடையாளம் காணப்படாத அசாதாரண நிகழ்வுகள் பற்றிய முக்கிய குழுவின் கூட்டத்தை அமெரிக்க நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகள் சபை கடந்த வாரம் புதன்கிழமையன்று கூட்டியது. இந்த மர்மமான புலப்பாடுகள் (யுஏபி) அரசின் உயர் மட்டங்களில் ஆய்வுக்கு தகுதியானவை என்பதை ஒப்புக்கொள்ளும்விதமாக இது அமைகிறது.

“அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிறிய பச்சை மனிதர்களையோ அல்லது பறக்கும் தட்டுகளையோ விசாரணைக்கு கொண்டு வரப்போவதில்லை... நாங்கள் உண்மைகளை கண்டறியப்போகிறோம்,” என்று குடியரசுக் கட்சியின் டிம் புர்செட் கூட்டத்தின் தொடக்கத்தில் கூறினார். ஆயினும் சாட்சிகள் அளித்த வாக்குமூலம் சில நேரங்களில் நமக்குத் தெரியாத ஒன்றை நோக்கிச்சாய்ந்தன.

இயற்பியல் விதிகளை மீறும் பொருட்களுடன் தங்களுக்கு ஏற்பட்ட சந்திப்புகளின் அனுபவங்களை, இரண்டு மணிநேரம் நீடித்த இந்தக்கூட்டத்தில் மூன்று சாட்சிகள் பகிர்ந்து கொண்டனர். வெளியே சொல்வதற்கு பயந்த விமானிகள், விமானங்களில் இருந்து மீட்கப்பட்ட உயிரியல் பொருட்கள் மற்றும் உண்மைகளை வெளியே சொல்பவர்களுக்கு எதிரே நடப்பதாகக் கூறப்படும் பழிவாங்கல் ஆகியவை குறித்தும் அப்போது தெரிவிக்கப்பட்டது. அசாதாரண நிகழ்வுகள் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என்பதை அனைவரும் ஒப்புக்கொண்டனர்.

இந்தக்கூட்டத்தில் நடந்த பேச்சுக்களில் அதிர்ச்சியூட்டும் எந்தத்தகவலும் வெளியாகவில்லை. வேற்றுகிரகவாசிகள் இருப்பதும் உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால் நேரில் பார்த்த சாட்சிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தங்கள் அனுபவங்களை பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பை பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. சட்டமியற்றுபவர்களும் சாட்சிகளும், ராணுவத்திடம் இருந்து மர்மமான புலப்பாடுகளைப்பற்றிய அதிக வெளிப்படைத் தன்மையைக் கோருவதற்கு இந்த கூட்டத்தை பயன்படுத்திக்கொண்டனர்.

ஓய்வுபெற்ற அமெரிக்க கடற்படை தளபதி டேவிட் ஃபிரேவர், 2004 ஆம் ஆண்டில் ‘டிக்-டாக்” வடிவிலான யுஏபி ஐ தான் பார்த்ததை மீண்டும் ஒருமுறை விவரித்தார். இது விமானிகளை குழப்பும் விதமாக நகர்ந்தது. அதன் வீடியோ பதிவு 2017 இல் வெளியிடப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்க கடற்படையால் அது வெளிப்படையாக சரிபார்க்கப்பட்டது.

“நாங்கள் எதிர்கொண்ட தொழில்நுட்பம், இன்று நம்மிடம் உள்ள அல்லது அடுத்த தசாப்தத்தில் நாம் உருவாக்க திட்டமிடும் எதையும் விட மிக உயர்ந்ததாக இருந்தது” என்று ஃப்ரேவர் கூறினார்.



அரசு அதிகாரிகள் தகவல்களை வெளிவராமல் அடக்கி, விசில்ப்ளோயர்களை தண்டித்தனர் என்று முன்னாள் விமானப்படை உளவுத்துறை அதிகாரி டேவிட் க்ரூஷ் சுட்டிக்காட்டினார். ஆனால் ரகசிய தன்மை தொடர்பான சட்டங்கள் காரணமாக பொதுவெளியில் இது பற்றி மேலும் விவரிக்க முடியாது என்று அவர் கூறினார்.

### ‘மனிதரா, மனிதர் அல்லாததா?’

ஒரு குறிப்பிடத்தக்க பரிமாற்றத்தில், தென் கரோலினாவைச்சேர்ந்த குடியரசுக் கட்சியின் நான்சி மேஸ், “இந்த பூமியை சேராத பொருட்கள் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்” என்று க்ரூஷிடம் கேட்டார்.

அரசால் மீட்கப்பட்ட எந்தவொரு வானூர்தியிலாவது ‘உயிரியல்” தொடர்பான பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதா என்றும் அவர் வினவினார்.

தனது முந்தைய ஊடக நேர்காணல்களைக் குறிப்பிட்ட க்ருஷ் “இந்த மீட்டெடுப்புகள் சிலவற்றுடன் உயிரியல் பொருட்கள் இருந்தன” என்று பதிலளித்தார்.



“அவை மனிதர்களா அல்லது மனிதர் அல்லாததா”? என்று மேஸ் கேட்டார்.

‘மனிதர் அல்லாதவை. இந்தத்திட்டம் பற்றிய நேரடி தகவல் உள்ளவர்களின் மதிப்பீடு இது. அவர்களுடன் நான் பேசியபோது இது தெரியவந்தது,” என்று க்ரூஷ் பதிலளித்தார். மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அவர், வேற்று கிரக பொருள் எதையும் தான் தனிப்பட்ட முறையில் பார்த்ததில்லை என்பதை உறுதிப்படுத்தினார்.

ராணுவப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள், “விளக்கம் இல்லாத காட்சிகள்’ பற்றி அறிக்கை பதிவு செய்யும் விதமாக, அதிகாரப்பூர்வ தகவல் அளிக்கும் செயல்முறை இருக்கவேண்டும் என்று நேரில் கண்ட சாட்சிகள் அழைப்பு விடுத்தனர்.

“பைலட்டுகள் தங்கள் வேலையை இழக்கும் அச்சம் இல்லாமல், இது பற்றி தெரிவிக்கக்கூடிய ஒரு அமைப்பு தேவை” என்று அமெரிக்கன்ஸ் ஃபார் சேஃப் ஏரோஸ்பேஸ் அமைப்பின் இயக்குனர் ரியான் கிரேவ்ஸ் கூறினார்.

அந்தக்கோரிக்கையை கூட்டத்தொடரின் முடிவில் நிறைவேற்ற காங்கிரஸ் ஆர்வமாக இருப்பதாகத் தெரிகிறது.

“யுஏபிகள், அவை எதுவாக இருந்தாலும், நமது ராணுவம் மற்றும் சிவிலியன் விமானங்களுக்கு கடுமையான அச்சுறுத்தலாக இருக்கலாம். அதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்” என்று கலிஃபோர்னியாவை சேர்ந்த ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ராபர்ட் கார்ஸியா கூறினார்.

யுஏபிக் கள் குறித்து அதிக அறிக்கையிடலை நாம் ஊக்குவிக்க வேண்டும். நாம் எவ்வளவு அதிகமாக புரிந்துகொள்கிறோமோ, அவ்வளவு பாதுகாப்பாக இருப்போம்.” என்றார் அவர்.

குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் இது தீவிர விஷயம் என்று கருதினாலும் வேற்று கிரக செயல்பாடுகள் நடைபெறுவதாக ஒரு சிலர் சந்தேகம் தெரிவித்தனர்.

### “வேற்றுக்கிரக உயிரின் திறமையின்மை”

விமானிகள் வேற்றுக்கிரக பொருட்களைப் பார்த்தார்கள் என்ற கருத்தின் மீது சந்தேகத்தை ஏற்படுத்த மிசோரியை சேர்ந்த குடியரசுக் கட்சி உறுப்பினர் எரிக் பர்லிசன் முயற்சி செய்தார். ‘நம்மை அடைய பில்லியன்கணக்கான மைல்கள் பயணிக்கக்கூடிய உயிரினங்கள், பூமியில் விபத்துக்குள்ளாகும் அளவுக்கு “திறமையற்றவை” யாக இருக்கும் என்று நம்புவது கடினம் என்று அவர் கூறினார்.

யுஏபிக்கள், ராணுவ ஒப்பந்தக்காரர்களால் உருவாக்கப்பட்ட வானூர்திகளா அல்லது வேறு அரசு நிறுவனங்கள் மறைத்து வைத்திருக்கும் ரகசிய ஏஜென்சி திட்டங்களைச் சேர்ந்தவையா என்று அவர் வினவினார்.

ருகுழுக்களை பகிரங்கமாக ஒரு கொள்கை வியமாக வாஷிங்டன் ஏற்றுக்கொண்டது, இந்த, மர்மமான பொருட்களைப் போலவே வியக்க வைக்கும் வேகத்தில் நடந்தது. ஒரு சில ஆர்வலர்களுடன் முன்பு மறைவாக நடந்து வந்த சந்திப்புகள் இப்போது தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் அளவிற்கு முன்னேறியுள்ளது. தேசிய பாதுகாப்பு தொடர்பான வேறு எந்த ஒரு விஷயத்தையும் போலவே தீவிரமான கேள்வி கணைகள் இந்தக்கூட்டத்தில் தொடுக்கப்பட்டன.

அடையாளம் காணப்படாத வான்வழி நிகழ்வை ஆராயும் ஒரு ரகசிய பென்டகன் திட்டம் இருப்பதாக 2017 ஆம் ஆண்டில் நியூயார்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டபோது இந்த விஷயம் பகிரங்கமானது.

இந்தத்திட்டத்தை முன்னாள் செனட் பெரும்பான்மை தலைவர் ஹாரி ரீட் ஆதரித்தார். அவர் நெவாடா மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

நியூயார்க் டைம்ஸ் மற்றும் டு தி ஸ்டார்ஸ் அகாடமி ஆஃப் ஆர்ட்ஸ் அண்ட் சயின்ஸ் என்ற அமைப்பும், யுஏபிகளுடன் விவரிக்கப்படாத சந்திப்புகளைக் காட்டும் மூன்று வீடியோக்களை வெளியிட்டது. அப்போதிலிருந்து அமெரிக்க ராணுவம், இந்த சந்திப்புகளை படிப்படியாக ஒப்புக்கொண்டது, அதே நேரத்தில் அவற்றின் தோற்றம் பற்றிய ஊகங்களை வெளியிட மறுக்கிறது.

இப்போது யுஏபி கள் என பலரால் அறியப்படும் ருகுழு கள் பற்றி விசாரிப்பது, அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஒரு அரிய இருகட்சி விஷயமாக மாறியுள்ளது. ஆய்வுகள் மற்றும் ராணுவ வெளிப்படைத்தன்மைக்கு இரு கட்சிகளின் உறுப்பினர்களும் அழைப்பு விடுத்துள்ளனர். 2022 இல் ஹவுஸ் இன்டலிஜென்ஸ் கமிட்டி, ரகசிய பென்டகன் திட்டத்தைப் பற்றி விசாரணை நடத்தியது. நாஸா அமைப்பு ஜூன் மாதம் இது தொடர்பாக பொது விசாரணை நடத்தியது.

முன்னாள் அதிபர்களான ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பராக் ஒபாமாவும், குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டொனால்ட் டிரம்பும் பொது நேர்காணல்களில் இவ்விவகாரம் பற்றி பேசியுள்ளனர். தான் திறந்த மனதுடன் இருப்பதாக தேசிய பாதுகாப்பு சபையின் செய்தி தொடர்பாளர் ஜான் கிர்பி கூறினார்.

“கடற்படை மற்றும் விமானப்படையின் பைலட்டுகள் கண்ட மற்றும் அறிக்கை பதிவுசெய்த,” விவரிக்கப்படாத வான்வழி நிகழ்வுகள்’ சரிதான் என்று நாங்கள் நம்புகிறோம் என்று கிர்பி கூறினார். “ஆனால் இந்த நிகழ்வுகள் என்ன என்பதற்கான பதில்கள் எங்களிடம் இல்லை.” என்றார் அவர்.

புதன்கிழமையன்று தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பான காங்கிரஸ் விசாரணையில் ஏறக்குறைய எல்லா உறுப்பினர்களும் இந்த விஷயம் தொடர்பாக தங்கள் கேள்விகளை கேட்டனர்.

ஃப்ளோரிடாவை சேர்ந்த ஜனநாயக கட்சி உறுப்பினர் ஜாரெட் மாஸ்கோவிட்ஸ், “பல அமெரிக்கர்கள் இந்த விஷயம் குறித்து மிகவும் ஆர்வத்துடன் உள்ளனர். இதுபோன்ற ’வேற்றுக்கிரகவாசி’ விஷயம், நம்மை ஒன்றிணையச்செய்யும் வழியாக இருக்கக்கூடாது,” என்று குறிப்பிட்டார்.

# சீர்திருத்தங்களை முன்னெடுக்க ஜனாதிபதி சகல மட்டங்களிலும் நம்பிக்கையை கட்டியெழுப்பவேண்டியது அவசியம்!



கலாநிதி ஜெகான் பெரேரா

பொருளாதார வீழ்ச்சி மற்றும் அதன் விளைவான அரசியல் போராட்டங்களின் உடனடி யதார்த்த நிலைவரங்களை கையாளுவதற்கான தேவை கடந்த இரு வருடங்களாக அரசியல் நலனில் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது. ஆனால், தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினை மற்றும் நல்லிணக்கச் செயன்முறையை தேசிய அரசியலில் முக்கிய இடத்துக்கு கொண்டு வந்திருக்கிறார். அது அவ்வாறுதான் இருக்கவேண்டும்.

தீர்வு காணப்படாதிருக்கும் இனப்பிரச்சினை பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை கையாளுவதற்கான நாட்டின் முயற்சிகள் மீது ஒரு ஆபத்தான தாக்கத்தை தொடர்ந்து ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. விடுதலை புலிகளின் தலைமைத்துவம் முல்லைத்தீவில் போர்க்களத்தில் அழித்தொழிக்கப்பட்டதுடன் இனப்பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டது என்ற நம்பிக்கை ஆதாரமற்றது என்பது நீண்ட நாட்களுக்கு முன்னரே நிரூபிக்கப்பட்டுவிட்டது.

மத்திய மயப்படுத்தப்பட்ட அரசின் ஆதிக்கத்துக்கு எதிரான தமிழர்களின் எதிர்ப்பு பலவீனப்படுத்தப்பட்டதை அடுத்து வெளித்தலையீடுகள் பலமடைந்திருக்கின்றன.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தங்களால் திரட்டப்படுகின்ற எந்தவொரு சான்றும் சர்வதேச நியாயாதிக்கத்தின் அடிப்படையில் வழக்குத்தொடுக்க விரும்புகின்ற எந்தவொரு நாட்டுக்கும் கிடைக்கச் செய்யப்படும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கடைசியாக நடைபெற்ற அதன் கூட்டத்தொடரில் பிரகடனம் செய்தது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மட்டத்திலான ஆராய்வில் முன்னரங்கத்தில் தொடர்ச்சியாக நிற்கும் எந்தவொரு நாட்டினதும் நேர்மறையான படிமம் வெளிநாட்டு முதலீடுகளைப் பெறுவதற்கு நிச்சயமாக இடையூறாகவே இருக்கும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் இலங்கை அரசுக்கு எதிரான அறிவுறுத்தல்கள் இறுக்கமடைந்து கொண்டுபோவதையே காணக்கூடியதாக இருக்கிறது. தேசிய நல்லிணக்க செயன்முறையில் வெற்றி காணப்படுமேயானால், நாட்டுக்கு வெளிநாட்டு முதலீடுகளைக் கவரும் முயற்சிகளில் ஒரு உத்வேகம் பிறக்கும்.

அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை வகுப்பது குறித்து ஆராய்வதற்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க கடந்தவாரம் பாராளுமன்றத்தில் உள்ள சகல அரசியல் கட்சிகளையும் அழைத்தார். அந்த அழைப்பை பெரும்பாலான கட்சிகள் ஏற்றுக்கொண்டன.

சர்வகட்சி மகாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி இந்த விவகாரத்தில் எடுக்கப்படக்கூடிய எந்தவொரு தீர்மானமும் சம்பந்தப்பட்ட சகல கட்சிகளினதும் கருத்துக்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளை கையாளுவதற்கு புதிய சட்டங்களை நிறைவேற்றுவதற்கான அதிகாரம் தனக்கோ அல்லது தனக்கு முன்னர் பதவியில் இருந்த ஏழு ஜனாதிபதிகளுக்கோ இருக்கவில்லை என்றும் அவ்வாறு செய்யும் அதிகாரம் முற்றுமுழுதாக பாராளுமன்றத்துக்கு மாத்திரமே இருக்கிறது என்றும் அவர் கூறினார். ஆனால், மகாநாட்டில் பங்கேற்ற கட்சிகள் வெளியிட்ட கருத்துக்கள் அரசியல் முறைமை முழுவதும் அவநம்பிக்கை பரவிக்கிடக்கிறது என்பதை பிரதிபலித்தன.

சகல தரப்புகளிலும் உள்ள அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளிலும் உட்கிடையாக அரசியல் சுயநலனும் அதிகார வேட்கையும் இருக்கின்றன என்று ஒரு நம்பிக்கை உண்டு. அரசாங்கத்தின் நடத்தை இந்த அவநம்பிக்கையை இல்லாமல் செய்ய உதவவில்லை.

## தேர்தல்கள் ஒத்திவைப்பு

மாகாணசபை தேர்தல்களுக்கு முன்னுரிமை கொடுத்து சர்வகட்சி மகாநாட்டில் எதிர்க்கட்சிகள் முன்வைத்த வாதங்கள் இரு அடிப்படைகளில் பெறுமதியானவையாக இருக்கின்றன.

முதலாவது மாகாண சபைகளில் எந்தவொரு சீர்திருத்தத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட மாகாணசபைகள் அவசியமாகும். இரண்டாவது தற்போதைய அரசாங்கம் கொண்டிருக்கக்கூடிய மக்கள் ஆணையின் சந்தேகத்துக்கிடமான தன்மையாகும்.

"அறகலய" காலப்பகுதியில் அன்றைய ஜனாதிபதியையும் பிரதமரையும் அமைச்சரவையையும் பதவிவிலக நிர்ப்பந்தித்த மக்கள் கிளர்ச்சி அரசாங்கம் முன்னர் அனுபவித்த மக்கள் ஆணையை செல்லுபடியானதாக்குவதற்கு புதிய தேர்தல் ஒன்றை அவசியப்படுத்தியது. ஆனால் அதற்கு பதிலாக பாராளுமன்றத்தில் உள்ளவர்கள் அரசியலமைப்பின் பிரகாரம் புதிய ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்தனர்.

பாதுகாப்பு படைகளைப் பயன்படுத்தி போராட்ட இயக்கத்தை ஒடுக்குவதற்கு புதிய ஜனாதிபதியிடம் அரசியல் சாதுரியமும் துணிவாற்றலும் இருந்தது. ஆனால், ஆணை தொடர்பான கேள்வி தொடரவே செய்கிறது.

மக்கள் தங்களது பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்கு கிரமமாக தேர்தல்களை நடத்துவது ஜனநாயக அரசியல் சமுதாயமொன்றின் அடிப்படை அம்சமாகும். இது விடயத்தில் இலங்கை குறைபாடுகளுடைய ஒரு ஜனநாயகமாகப் போய்விட்டது.

அரசாங்க நிருவாகத்தின் இரண்டாவது, மூன்றாவது அடுக்குகளுக்கு தேர்தல்கள் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன. மாகாணசபை தேர்தல்கள் நான்கு வருடங்களுக்கும் மேலாக நடத்தப்படவில்லை. உள்ளூராட்சி தேர்தல்கள் ஐந்து மாதங்களுக்கு முன்னர் நடத்தப்பட்டிருக்க வேண்டும்.



ஜனாதிபதியினால் உத்தேசிக்கப்படுகின்றவாறு மாகாணசபைகளின் அதிகாரங்களை மேம்படுத்துவதற்கு முன்னதாக அவற்றுக்கு தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்று சர்வகட்சி மகாநாட்டில் கலந்துகொண்ட பெரும்பாலான கட்சிகள் கோரிக்கை விடுத்தன. மாகாணசபைகளை வலுவூட்டுவதற்கு அவை நடைமுறையில் இருக்கவேண்டியது அவசியம். மாகாணசபைகளுக்கு தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள் அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளில் அடையாளம் காணப்படக்கூடிய போதாமைகளையும் குறைபாடுகளையும் சுட்டிக்காட்டுவதற்கு பெருமளவுக்கு நியாயப்பாட்டையும் அறிவையும் கொண்டிருப்பார்கள்.

இத்தகைய பின்னணியில், இந்த நேரத்தில் தேர்தல்களை நடத்தவேண்டிய தேவை முன்னுரிமைக்குரியது என்று நல்லெண்ணமுடைய மக்கள் கருதுவது நியாயமானதேயாகும். மாகாணசபை தேர்தல்களை நடத்தவேண்டும் என்று சர்வகட்சி மகாநாட்டில் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு ஜனாதிபதி மகாநாட்டை இடைநடுவில் முடித்துக்கொண்டு வெளியேறி தனது பிரதிபலிப்பை வெளிக் காட்டினார். அவரது செயல் அந்த வேண்டுகோளை அவர் நிராகரித்ததன் விளைவா அல்லது இந்த விவகாரத்தில் தனது நிலைப்பாட்டையும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும் மறுபரிசீலனை செய்யப்போகிறாரா என்பது அடுத்தவரும் நாட்களில் தெளிவாகும்.

ஜனநாயக அடிப்படையில் நோக்கும்போது தேர்தல்களை ஒத்திவைப்பது என்பது நியாயப்படுத்த முடியாததாகும். தேர்தல் போட்டியொன்றில் மக்கள் செல்வாக்கை பெரிதாக வெளிப்படுத்துவது சாத்தியமில்லை என்ற அரசாங்கத்தின் கணிப்பீட்டின் அடிப்படையில் தேர்தல்களை ஒத்திவைப்பது ஜனநாயக நியமங்களைச் சீரழிக்கும் செயலாகும்.

2024 தேர்தல்கள் வருடமாக இருக்கும் என்று கூறிய ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜேவர்தன அந்த வேளையில் எதிர்க்கட்சியில் உள்ள உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் இணைவார்கள் என்று நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

## இப்போதே தொடங்கவேண்டும்

இந்த சூழ்நிலைகளில் தேர்தல்களை சாத்தியமானளவு நீண்டகாலத்துக்கு ஒத்திவைக்க அரசாங்கம் விரும்பக்கூடும். இது குறைந்தபட்சம் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டியிருக்கும் 2024 செப்டெம்பர் வரை நீடிக்கக்கூடும். ஆனால், ஜனாதிபதியின் நேர அட்டவணைக்கு பொருந்தக்கூடிய வகையில் தேர்தல்களை ஒத்திவைப்பது ஒரு ஜனநாயக சீரழிவாக அமையும்.

தேர்தல்களை ஒத்திவைக்கும் இத்தகைய நாட்டுக்கு பாதகமான கைங்கரியங்கள் இலங்கைக்கு ஒன்றும் புதியவையல்ல. 1975 ஆம் ஆண்டு அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை நாடு கண்டது. தன்னால் கொண்டுவரப்பட்ட புதிய அரசியலமைப்பு பதவியில் இருப்பதற்கு மேலதிகமாக இரு வருடங்களை தந்திருப்பதாக கூறி அன்றைய அரசாங்கம் தேர்தலை பின்போட்டது. தேர்தல் நடந்தபோது அந்த அரசாங்கம் படுமோசமாக தோற்கடிக்கப்பட்டது

இன்னொரு சந்தர்ப்பத்தில் உரிய நேரத்தில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு பதிலாக அரசாங்கம் பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கு சர்வஜனவாக்கெடுப்பை நடத்தியது. அதற்கு பிறகு இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான 1983 கறுப்பு ஜூலை இனவன்செயல்கள் மூன்று தசாப்தகால உள்நாட்டுப்போருக்கு வழிவகுத்தன.

நாட்டின் எதிர்காலத்துக்கான ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் நோக்கு எதுவாக இருந்தாலும், அவர் ஜனநாயக செயன்முறைகளுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டியது அவசியமாகும். இதற்கு உள்ளூராட்சி தேர்தல்களும் மாகாணசபை தேர்தல்களும் விரைவாக நடத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதியின் பங்களிப்பின் பெறுமதியும் நம்பகத்தன்மையும் அந்த தேர்தல்களில் அரசாங்கம் வெற்றிபெறுகிறதோ தோல்வியடைகிறதோ என்பதில் அவர் எடுக்கக்கூடிய தீர்மானத்தின் நேர்மையில்தான் தங்கியிருக்கிறது. ஜனநாயக நியமங்களை பின்பற்றுவதில் அவர் காட்டக்கூடிய உறுதிப்பாடு அரசியல் சமுதாயத்துக்கு அவர் மீதும் அவரின் உறுதிமொழிகள் மீதும் நம்பிக்கையைப் பெருக்கும்.

நாட்டை சரியான தடத்தில் பயணம் செய்யவைப்பதற்கு தேவையான பொருளாதார சீர்திருத்தச் செயன்முறையை ஜனாதிபதி தொடங்கியிருக்கிறார். அதே போன்றே சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து நாட்டை பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கிவரும் இனப்பிரச்சினை விடயத்திலும் நடந்துகொள்ள அவர் விரும்புகிறார் போன்று தெரிகிறது.

இந்த இரு குறிக்கோள்களையும் அடைவதற்கு அடுத்த ஜனாதிபதி தேர்தலை நடத்தவேண்டிய 2024 செப்டெம்பர் வரை ஜனாதிபதிக்கு கால அவகாசம் இருக்கிறது.

அரசியலமைப்பில் உள்ளவாறு 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டிய தேவையை கடந்த ஆறு மாத காலத்தில் செய்த பல அறிவிப்புக்களில் ஜனாதிபதி வலியுறுத்திக்கூறி வந்திருக்கிறார். தனக்கு முன்னர் பதவியில் இருந்த ஏழு ஜனாதிபதிகளும் செய்யத் தவறியதை விக்கிரமசிங்க செய்துகாட்டவேண்டிய தேவை இருக்கிறது. அதாவது பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் உட்பட மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை பரவலாக்கம் செய்வது தொடர்பில் அரசியலமைப்பில் உள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தவேண்டும்.

13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை கல்விமான்கள், சமூகத்தலைவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் வழிநடத்திலின் கீழான அறிவூட்டல் செயன்முறையொன்றில் இருந்து தொடங்கலாம்.

மாகாணங்களுக்கு முழுமையான அதிகாரப்பரவலாக்கத்தைச் செய்தாலும் கூட பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தின் இறுதி அதிகாரத்தின் கீழ் எவ்வாறு இருக்கும் என்பதை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன் தனது அண்மைய கட்டுரைகளில் தெளிவாக விளக்கியிருக்கிறார். அவர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைவுக்குழுவின் ஒரு உறுப்பினரா இருந்தவர்.

நம்பிக்கைப் பற்றாக்குறையே இலங்கையில் உள்ள பிரச்சினையாகும். அது சர்வ வியாபகமாக இருக்கிறது. அதை வெற்றிகொள்வதற்கு நம்பிக்கைவைக்கக்கூடிய தலைமைத்துவம் அவசியம்.

# அரோகரா கோஷம் விண்ணைப் பிளக்க நடைபெற்ற திருக்கோவில் கொடியேற்றம்



காரைதீவு, ஒக. 01

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவ திருக்கொடியேற்ற நிகழ்வு நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில், சிவஸ்ரீ திருக்குமரக் குருக்கள் தலைமையில்

ஆலயகுரு சிவஸ்ரீ அங்குச நாதக்குருக்கள் ஒத்துழைப்பில் கொடியேற்ற உற்சவம் 12.23 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த உற்சவம் 18 நாட்கள் நடைபெற்று ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி புதன்கிழமை சமுத்திர தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களால் சிறிய கோயிலாக அமைக்கப்பட்டு பின்பு இராஜராஜ சோழர் காலத்தில் கற்கோயில் அமைக்க பெற்று நான்கு கால பூஜைகள் செய்யப்பட்டு ஆடி அமாவாசை உற்சவமும் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தினமும் பகலில் ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப்படவிருக்கிறது. (அ)



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாக கிழக்கு மாகாண ஆளுநரின் வழிகாட்டலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென்மேற்கு பட்டிபளை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில்

சனிக்கிழமை அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயத்தில் மாபெரும் நடமாடும் சேவை இடம்பெற்றது.

(அ)

# நாளை உகந்தை மலை முருகன் ஆடிவேல் விழா தீர்த்தோற்சவம்!

காரைதீவு,ஒக01

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலய வருடாந்த ஆடி வேல் விழா தீர்த்தோற்சவம் நாளை புதன்கிழமை சமுத்திரத்தில் நடைபெறவுள்ளது.

ஆடிவேல் விழா உற்சவம் தொடர்ந்து 13 நாட்கள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றுவந்தது.

ஆலய பரிபாலன சபை வண்ணக்கர் டி.எம்.சுதுநிலமே திசாநாயக்க தெரிவிக்கையில்-

வழக்கம்போல அன்னதானம் மற்றும் பஸ் போக்குவரத்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (அ)

# சைவப் புலவர் பரீட்சைகளில் சித்தியடைந்தோரின் விவரம்!

யாழ்ப்பாணம்,ஒக01

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தால் நடத்தப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான சைவப் புலவர் மற்றும் இளம் சைவப் புலவர் தேர்வுகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன என்று அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ. த. குமரன் அறிவித்துள்ளார் .

இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் விவரம் வருமாறு,

சைவப்புலவர் பரீட்சையில், மூத்ததம்பி சிவகுமாரன் (கொக்கட்டிச்சோலை), கந்தசாமி கயிலைநாதன் (மானிப்பாய்), குணசிங்கம். கந்தபாலன் (கோப்பாய் ), திருமதி சிவப்பிரியா ராஜ்குமார் (இணுவில்) , பராபரம் துளசிரஞ்சன் (மட்டக்களப்பு), பிரம்மஸ்ரீ குமாரசாமி சர்மா சுவாமிநாதசர்மா (இணுவில்)ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்

இளம்சைவப்புலவர் பரீட்சையில், மகேந்திரன் வினோக்சன் (பொலநறுவை) , அருமைநாதன் சதீஷ்குமார் (திருகோணமலை), செல்வி கனகேந்திரன் யோகமணி (திரணியகல) ,செல்வி. நடராஜா தர்ஷிகா (பொலநறுவை), சுதாகரன் ஸர்காந் (களுவாஞ்சிக்குடி), செல்வி அழகேந்திரன் நிலாந்தினி (மூதூர்), செல்வி பானுப்பிரியா தில்லைமணி (வட்டுக்கோட்டை) ஆகியோர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

(ஐ)






# மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் விபத்து!

## மூவர் படுகாயம்

மட்டக்களப்பு, ஒகஸ்ட். 01

**மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குடாவில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற பாரிய விபத்து சம்பவத்தில் மூவர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.**



கல்முனையிலிருந்து மாங்காய்களை ஏற்றிக்கொண்டு மினுவான்கொடை நோக்கி வந்த லொறி ஒன்று சாரதியின் அதிக தூக்கம் காரணமாக மட்டக்களப்பு தொழில்நுட்ப கல்லூரிக்கு முன்னால் உள்ள மின் கம்பத்தில் மோதி பாரிய விபத்துக்குள்ளாகி உள்ளது.

இதன் காரணமாக லொறி பாரிய சேதமடைந்துள்ளதுடன் பயணித்த லொறியின் நடத்துநருக்கு பாரிய காயங்கள் ஏற்பட்டு பலத்த காயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திடீரென மின் கம்பத்தில் மோதியதன் காரணமாக பின்னால் வந்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் மோட்டார் சைக்கிள் கீழே விழுந்து படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த குறித்த சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிசார் சாரதியைக் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# மோட்டார் சைக்கிள் சாகசங்கள் செய்யும் இனந்தெரியாத நபர்கள்

## மக்கள் அச்சநிலையில்



கல்முனை, ஒகஸ்ட். 01

தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளில் வரும் இனந்தெரியாத நபர்கள் பொதுப்போக்குவரத்தை சீர்குலைத்து அச்சுறுத்தி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவு சாய்ந்தமருது பெரியநீலாவணை பொலிஸ் பிரிவில் உள்ளடங்குகின்ற பிரதான வீதிகள், உள்ளக வீதிகளில் இவ்வாறு இனந்தெரியாத நபர்கள் தலைக்கவசம் இன்றி பொதுப் போக்குவரத்தை குழப்பும் வகையில் அதிசக்தி இயந்திரம் கொண்ட மோட்டார் சைக்கிளில் பயணித்து அச்சுறுத்தி வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு அப்பகுதி பாராளுன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் உட்பட சிலர் முறைப்பாடுகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானவர்கள் வீதி போக்குவரத்துச் சட்டத்தை மதிக்காமல் தொடர்ச்சியாக பாடசாலை நாட்கள் அலுவலக நாட்களிலும் மிகவேகமாக மோட்டார் சைக்கிள்களைச் செலுத்தி சாகசங்களை மேற்கொண்டு வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# கறுவாக்கேணி விக்னேஸ்வரா 63 ஆவது கல்லூரி தின நிகழ்வு




மட்டக்களப்பு, ஒக. 01

மட்டக்களப்பு கல்குடா வலயத்தின் கறுவாக்கேணி விக்னேஸ்வரா கல்லூரியின் 63 ஆவது கல்லூரி தினம் நேற்று வெகு சிறப்பாக கல்லூரியில் நடைபெற்றது.

பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறுபட்ட நிகழ்வுகளுக்கு கல்லூரி அதிபர் எஸ்.சுதாகரன் தலைமை வகித்தார்.

முதல் நிகழ்வாக பழைய மாணவர்களையும் சமூகத்தையும் ஒன்றிணைக்கும் முகமான நடை பவனி நேற்றுக் காலை இடம்பெற்றது.

கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற தமிழ் மொழி வாழ்த்துப் பாவைத் தொடர்ந்து சத்தியப்பிரமாணத்துடன் ஆரம்பமான நடை பவனி கல்லூரி மைதானத்தில் இருந்து ஆரம்பமாகி கொழும்பு-வாழைச்சேனை வீதி வழியாகச் சென்று சுற்று வளைவு மையத்தை அடைந்தது.

அங்கு அமைக்கப்பட்டுள்ள சுவாமி விபுலானந்தர் சிலைக்கு அதிபரினால் மலர் மாலை அணிவிக்கப்பட்டது. அங்கிருந்து மட்டக்களப்பு வீதி வழியாக சென்று கறுவாக்கேணி முத்துமாரியம்மன் கோவில் முன்றலில் தயாராக நின்ற கௌரவ அதிதிகள் அனைவரும் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதுடன் கலாசார வாத்திய இசையுடன் அழைத்து செல்லப்பட்டனர். நடை பவனி கல்லூரியை சென்றடைந்தது.

இவ் நடைபவனியில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாதைகளை கைகளில் ஏந்தியிருந்தனர்.

பின்னர் கல்லூரியின் அமைந்துள்ள சரஸ்வதி சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு தேசிய கொடி ஏற்றப்பட்டு, மங்கள விளக்கேற்றல் நிகழ்வும் நடைபெற்றது.

தொடர்ந்து மாணவர்களின் வரவேற்பு நடனம் பழைய மாணவர் சங்க உப தலைவர் கு. லக்ஷ்மணகாந்தனின் வரவேற்புரையைத் தொடர்ந்து அதிபர் தலைமை உரையாற்றினார்.

பின்னர் கல்லூரியின் வளர்ச்சிக்கு சேவையாற்றிய முன்னாள் அதிபர்களான க.தவராஜா மற்றும் கா.அருமைராஜா ஆகியோர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் வாழ்துமடல் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கி கல்லூரி சமூகத்தினால் பாராட்டப்பட்டனர்.

கடந்த காலத்தில் சேவையாற்றிய முன்னாள் ஆசிரியர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த நிகழ்வில் அதிதிகளாக பிரதேச கிராம சேவகர். அ.பிரபு,கல்வி திணைக்கள அதிகாரிகள் மற்றும் வாழைச்சேனை பொலிஸ் நிலைய உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# சாய்ந்தமருது ஸம்ஸ் ம.வியில் நாடகப் பயிற்சிப் பட்டறை

அம்பாறை, ஒகஸ்ட். 01

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தொளஸ் மகபக வேலைத்திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகப் பயிற்சிப் பட்டறை சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபீகாவின் ஒருங்கிணைப்பில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வளவாளர்களாக முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரியும் ஓய்வு பெற்ற அதிபருமான ஏ. பீர் முஹம்மட் மற்றும் கலைஞர் அஸ்வான் மௌலானா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.



நின்சான், சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.சி. றிப்கா அன்சார், சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ். சுரேஷ்குமார், அபிவிருத்தி உத்தியோகத்தர் மாஜிதா உட்பட உயர்தர மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

இப்பயிற்சிப் பட்டறையில் சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் உயர்தரம் கற்கும் மாணவிகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டதுடன் இதன்போது வளவாளர்களால் நாடகப்பிரதி எழுதுவது தொடர்பாகவும் நாடகம் எவ்வாறு நடிப்பது சம்பந்தமாகவும் செய்முறை விளக்கங்களோடு மாணவிகளுக்கு பயிற்சிகளும் கொடுக்கப்பட்டன. (அ)

# வெருகல் கட்டையாறு பாலம் புனரமைப்பு

திருமலை, ஒகஸ்ட். 01

திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் பிரதேச செயலக பிரிவில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 50 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வரும் கட்டையாறு பாலத்துக்கான களவிஜயத்தை இராஜாங்க அமைச்சர். சிவனேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) கடந்த சனிக்கிழமை முன்னெடுத்தார்.

குறித்த பாலம் விவசாயிகள் பயன்படுத்தும் அத்தியாவசிய மான பாலமாக கருதப்பட்ட போதிலும் மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் இருந்தது.

கிராம மக்களும் விவசாய அமைப்புக்களும் இராஜாங்க அமைச்சரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் சுமார் 50 மில்லியன் ரூபாய் செலவில் கடந்த மேமாதம் அளவில் குறித்த பாலத்துக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மேற்படி பாலம் முழுமையடையும் பட்சத்தில் அதனை சூழவுள்ள சுமார் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாய செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் மற்றும் அதனூடாக பயணம் செய்யும் பொதுமக்கள் என அனைவரும் நன்மையடைய உள்ளனர்.

இவ்விஜயத்தின்போது பாலத்தின் கட்டுமானப் பணிகள் தொடர்பாக இராஜங்க அமைச்சர் பொறியியலாளரிடம் விவரங்களை கேட்டறிந்தார். (அ)

ஈழநாடு



# உக்ரைன் - ரஷ்யா போரை நிறுத்த சவூதி அரேபியாவில் சமாதான பேச்சு!

ரியாத், ஓக. 01

**உக்ரைன் - ரஷ்யா போர் தொடர்பான சமாதானப் பேச்சுகளை எதிர்வரும் 5 மற்றும் 6ஆம் திகதிகளில் நடத்த மத்தியஸ்தம் வகிப்பதற்காக சவூதி அரேபியா அழைப்பு விடுத்துள்ளதாக வோல் ஸ்ட்ரீட் செய்தி அறிக்கை தெரிவிக்கிறது.**

இந்தோனேஷியா, எகிப்து, மெக்சிக்கோ, சிலி மற்றும் சாம்பியா உள்ளிட்ட 30 நாடுகளைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் இந்த இரு தினங்களில் சவூதி அரேபியாவில் நடக்கவிருக்கின்ற இந்த பேச்சில் பங்கேற்பர் என்று அறிய வருகிறது.

அத்துடன், உக்ரைன் மற்றும் மேற்கத்திய நாடுகளின் அதிகாரிகள் இந்தப் பேச்சுகள் உக்ரைனுக்கு நன்மை பயக்கக்கூடியதாகவும் மேலும் அமைதியான ஒரு நிலைமையை உறுதிப்படுத்த சர்வதேச ஆதரவை பெற்றுத் தரும் எனவும் எதிர்பார்ப்பதாக தெரிவிக்கின்றனர்.

இந்த பேச்சில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்படும் நாடுகளின் எண்ணிக்கை இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. இருப்பினும் ஜூனில் கோபன்ஹேகனில் நடந்த ஒப்பீட்டு பேச்சில்



பங்கேற்றவர்கள் இதில் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜெக் சல்லிவன் இதில் கலந்து கொள்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, போலந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன தமது பங்கேற்பை உறுதி செய்துள்ளன. இந்தப் பேச்சுகள் சவூதி அரேபியாவின் ஜித்தா நகரில் நடைபெறவுள்ளது. (ஐ)

# இந்தோ - ஐரோப்பா மொழி குடும்பம் 8,100 ஆண்டுகள் பழைமையானது!

புதுடில்லி, ஓக. 01

சமஸ்கிருதம் உள்ளிட்ட மொழிகளை உள்ளடக்கிய இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பம் சுமார் 8,100 ஆண்டுகள் பழைமையானது எனப் புதிய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லத்தீன், பிரெஞ்சு, ஜெர்மன், சமஸ்கிருதம் உள்ளிட்ட மொழிகள் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. அந்தக் குடும்பத்தின் தோற்றம் குறித்து இரு வேறு கருத்துகள் நிலவி வந்தன. 'ஸ்டெப்பி' என்ற கொள்கையின்படி, இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பமானது சுமார் 6,000 ஆண்டுகளுக்கு முன் காஸ்பியன் கடலோரப் பகுதியில் தோன்றியதாகக் கூறப்படுகிறது. அதேவேளையில், 'அனடோலியன்' என்ற கொள்கைப்படி, அந்த மொழிக் குடும்பமானது சுமார் 9,000 ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாகக் கூறப்படுகிறது.

இந்த இரு கொள்கைகளிலும் பல்வேறு முரண்பாடுகள் காணப்பட்டதால், இரண்டையும் அறுதியிட்டுக் கூற முடியாத சூழல் காணப்பட்டது.

இந்நிலையில், இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் தோற்றம் குறித்த புதிய ஆய்வை ஜேர்மனியைச் சேர்ந்த மொழியியலாளர்கள் மேற்கொண்டு வந்தனர். அதன்படி, அக்குடும்பமானது சுமார் 8,100 ஆண்டுகள் பழைமையானது எனக் கூறப்பட்டுள்ளது.

இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பம் சுமார் 7,000 ஆண்டுகளுக்கு முன் 5 முக்கிய பிரிவுகளாக பிரிந்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர். ஏற்கெனவே கூறப்பட்ட இரு கொள்கைகளையும் ஒன்றிணைத்து, நவீன முறைகளைப் பயன்படுத்தி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர்கள் கூறினர்.

# ஹெலிகொப்டர் விபத்தில் 4 படையினரை காணவில்லை!

சிட்னி, ஓக. 01

அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பகுதி அருகே பயிற்சியில் ஈடுபட்டிருந்த இராணுவ ஹெலிகொப்டர் கடலில் விபத்துக்குள்ளானதில் நான்கு படையினர் காணாமல் போயினர்.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:

அமெரிக்காவுடன் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஹெலிகொப்டர் வெள்ளிக்கிழமை இரவு கடல்பரப்பில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

இதையடுத்து, அந்த ஹெலிகொப்டருடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டிருந்த மற்றொரு ஹெலிகொப்டர் தேடுதல் பணியில் ஈடுபட்டது. இதில், விபத்



துக்குள்ளான ஹெலிகொப்டரின் சிதறல்கள் விட்சண்டே தீவு அருகே கண்டறியப்பட்டன. ஹெலிகொப்டரில் இருந்த 4 பேரையும் மீட்கும் குழுவினர் தொடர்ந்து தேடி வருகின்றனர் - என்றனர். (ஐ)




# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு 44 பேர் பலி; 100 பேர் வரை காயம்

பெஷாவர், ஓக. 01

பாகிஸ்தான் நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள கைபர் பக்துன்வா மாகாணத்தின் பஜூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசியல் கட்சி மாநாட்டில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் 44 பேர் பலியாகினர். நூற்றுக்கும் காயமடைந்துள்ளனர்.

ஜமியத் உலமா இஸ்லாம்-ஃபஸ்ல் என்ற கட்சி சார்பில் கார் தாலுகாவில் நடைபெற்ற இந்த மாநாட்டில் குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

இதில், அந்த கட்சியை சார்ந்த முக்கிய பிரமுகர் ஒருவரும் உயிரிழந்தார் என்று தகவல். மாநாடு நடைபெற்ற பகுதிக்குள் இந்த குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது. தற்கொலை படை மூலம் இந்த சம்பவம் அரங்கேற்றப்பட்டுள்ளது என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்புக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. சம்பவ இடத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள மருத்துவமனைகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக தகவல். குண்டு வெடிப்பில் மோசமாக காயமடைந்தவர்களை ஹெலிகொப்டர் மூலம் பெஷாவர் கொண்டு சென்று சிகிச்சை வழங்கப்படுவதாக அந்த மாகாணத்தின் அமைச்சர் ஃபிரோஸ் ஷா ஜமால் தெரிவித்துள்ளார்.

இந்த சூழலில் தங்கள் கட்சி உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும் என்றும் இதுகுறித்து முறையான விசாரணை வேண்டும் எனவும் காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டுமென ஜமியத் உலமா இஸ்லாம்-ஃபஸ்ல் கட்சியின் தலைவர் மௌலானா ஃபஸ்லுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். (ஐ)

# ரயில்வே காவலரின் சூட்டில் நான்கு பேர் உயிரிழப்பு!

## இந்தியாவில் நேற்று சம்பவம்



மும்பை, ஓக. 01

இந்தியாவின் ஜெய்ப்பூர் - மும்பை ரயிலில் பயணித்த 4 பயணிகளை புகையிரதத் துறை பாதுகாப்பு படை காவலர் ஒருவர் சுட்டுக் கொலை செய்துள்ளார். ஓடும் ரயிலில் அதிகாலை ஐந்து மணிக்கு இந்த துப்பாக்கி சூடு சம்பவம் நிகழ்ந்துள்ளது.

ஜெய்ப்பூரில் இருந்து மும்பை நோக்கி வந்து கொண்டிருந்த ஜெய்ப்பூர் எக்ஸ்பிரஸ் ரயிலில் இந்த துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. மகாராஷ்டிரா மாநிலம் பால்கர் ரயில் நிலையம் அருகே ரயில் வந்தபோது துப்பாக்கிச் சூடு நிகழ்த்தியுள்ளார் காவலர்.

மும்பையில் இருந்து 100 கி.மீ தொலைவில் உள்ளது இந்த ரயில் நிலையம். உயிரிழந்த நால்வரில் பாதுகாப்பு துறை உதவி ஆய்வாளர் ஒருவரும் அடக்கம். மற்ற மூவரும் ரயிலில் பயணித்த பயணிகள். துப்பாக்கிச் சூடு நடத்திய கான்ஸ்டபிள் சேத்தன் சிங் கைது செய்யப்பட்டுள்ளார்.

பயணிகளுக்கும் அவருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடே இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கு காரணம் என்று தெரிய வருகின்றது. (ஐ)




## மேஜர் லீக் கிரிக்கெட் போட்டி;
# பூரணின் அதிரடி சதத்தால் எம். ஐ. நியூயோர்க் சம்பியன்

நியூயோர்க், ஓக. 01

அமெரிக்காவில் நடக்கும் மேஜர் லீக் கிரிக்கெட் போட்டியில் நிகோலஸ் பூரண் சாதனை சதம் வீசி எம். ஐ. நியூயோர்க் அணியை வெற்றிபெற வைத்துள்ளார்.

அமெரிக்காவில் கிரிக்கெட் மீதான ஆர்வத்தை அதிகரிக்க செய்யும் வகையில், சர்வதேச வீரர்களைக் கொண்டு மேஜர் லீக் தொடர் நடத்தப்பட்டு வருகிறது. இந்தியாவில் ஐ. பி. எல். அணிகளை நிர்வகிக்கும் உரிமையாளர்களே அங்கும் அணிகளை வாங்கியுள்ளனர்.

இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் எம். ஐ நியூயோர்க் அணியும் சியாட்டல் ஆர்கஸ் அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய சியாட்டல் ஆர்கஸ் அணி 9 விக்கெட் இழப்புக்கு 183 ஓட்டங்கள் சேர்த்தது. குயின்ரன் டிகொக் அதிகபட்சமாக 87 ஓட்டங்கள் சேர்க்க, எம். ஐ நியூயோர்க் அணி சார்பில் ட்ரெண்ட் பவுல்ட், ரஷீத் கான் தலா 3 விக்கெட் கைப்பற்றினர்.

184 ஓட்டங்கள் இலக்கை துரத்திய எம்.ஐ நியூயோர்க் அணி ஆட்டத்தின் 3-வது பந்தில் ஸ்டீவன் ரெய்லர் விக்கெட்டை பறிகொடுத்தது. இதன்பின் வந்த கேப்டன் நிகோலஸ் பூரண் சியாட்டல் பந்துவீச்சை துவம்சம் செய்தார்.

16 பந்துகளில் அரைச்சதம் பதிவு செய்த நிகோலஸ் பூரண் 40 பந்துகளில் சதம் அடித்தார். ஆட்டமிழக்காமல் 55 பந்துகளைச் சந்தித்து 137 ஓட்டங்களை அவர் விளாசியதுடன் அணியை முதல் தொடரில் கிண்ணம் வெல்லவும் காரணமாக அமைந்தார்.

பூரண் எடுத்த 137 ஓட்டங்களில் 10 பௌண்ட்ரிகள், 13 சிக்ஸர்கள் அடக்கம். பூரண் அதிரடி காரணமாக எம். ஐ. நியூயோர்க் அணி 16 ஓவர்களில் 3 விக்கெட்டை இழந்து 184 ஓட்டங்கள் சேர்த்து 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (ஐ)

# எல். பி. எல். இருபது - 20 தொடர் யாழ்ப்பாணம் கிங்ஸ் வெற்றி!




கொழும்பு, ஓக. 01

எல். பி. எல். இருபது - 20 நான்காவது தொடரையும் வெற்றியுடன் ஆரம்பித்தது யாழ்ப்பாணம் கிங்ஸ் அணி.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ஆர். பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடந்த போட்டியில் கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணியை வீழ்த்தியது யாழ்ப்பாணம் அணி.

நாணயச் சுழற்சியில் வென்ற கொழும்பு அணி முதலில் யாழ்ப்பாணம் அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது. இதன்படி களமிறங்கிய அந்த அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது.

இதில், தௌஹித் ஹரிடோய் 39 பந்துகளில் 54 ஓட்டங்களைப் பெற்றதுடன் 22 ஓட்டங்களைப் பெற்ற ப்ரியமல் பெரேராவுடன் 4ஆவது விக்கெட்டுக்காக 41 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைப் பலப்படுத்தினார்.

துனித் வெல்லாலகே ஆட்டம் இழக்காமல் 25 ஓட்டங்களையும் ஆப்கானிஸ்தான் வீரர் ரஹ்மானுல்லா குர்பாஸ் 21 ஓட்டங்களையும் அணித் தலைவர் திஸர பெரேரா ஆட்டம் இழக்காமல் 14 ஓட்டங்களையும் நிஷான் மதுஷ்க, சரித் அசலங்க ஆகியோர் தலா 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் பந்துவீச்சில் பாகிஸ்தானின் நசீம் ஷா, மதீஷ பத்திரண, சாமிக்க கருணாரட்ன, லக்ஷான் சந்தகன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

176 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொழும்பு அணி 19.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 152 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

அணித் தலைவர் நிரோஷன் திக்வெல்லவும் பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அஸாமும் 3.4 ஓவர்களில் 33 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை ஏற்படுத்தினர்.

ஆனால், பாபர் அஸாம் 7 ஓட்டங்களை மட்டுமே பெற்றார். அவரைத் தொடர்ந்த பெத்தும் நிஸங்க ஓர் ஓட்டத்துடன் வெளியேறினார். இந் நிலையில் நிரோஷன் திக்வெல்லவும் நுவனிது பெர்னாண்டோவும் 4ஆவது விக்கெட்டுக்காக 38 ஓட்டங்களை பகிர்ந்து அணியைப் பலப்படுத்த முயற்சித்தனர்.

எனினும், நுவனிது பெர்னாண்டோ 17 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்ததைத் தொடர்ந்து பாகிஸ்தான் வீரர் மொஹமத் நவாஸ் 3 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார்.

யஷோத லங்காவும் சாமிக கருணாரட்னவும் இணைந்து திறமையாக துடுப்பெடுத்தாடி 6ஆவது விக்கெட்டில் 34 ஓட்டங்களை பகிர்ந்திருந்தபோது சாமிக கருணாரட்ன அநாவசியமாக அவசரப்பட்டு 23 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆனார்.

மொத்த எண்ணிக்கைக்கு மேலும் 7 ஓட்டங்கள் சேர்ந்த போத யஷோத லங்கா (11) ரன் அவுட் ஆனதுடன் நசீம் ஷா ஓட்டம் பெறாமல் ஆட்டம் இழந்தார்.

மறு பக்கத்தில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய ரமேஷ் மெண்டிஸ் 10 பந்துகளில் 17 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தார்.

கடைநிலை வீரர் மதீஷ பத்திரண 2 பவுண்டறிகளுடன் 8 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க யாழ்ப்பாணம் கிங்ஸின் வெற்றி உறுதியாயிற்று.

பந்துவீச்சில் ஹார்டஸ் வில்ஜோன் 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் விஜயகாந்த் வியாஸ்காந்த் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் டில்ஷான் மதுஷன்க 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

## இறுதி ஆஷஷ் டெஸ்ட் போட்டி:
# ஆஸியின் வெற்றிக்கு 249 ஓட்டங்கள் தேவை!



லண்டன், ஓக. 01

இங்கிலாந்துடனான ஆஷஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் கடைசி போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற 384 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் உள்ள தி ஓவல் மைதானத்தில் கடந்த 27ஆம் திகதி இந்த டெஸ்ட் போட்டி தொடங்கியது. இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 283 ஓட்டங்களும், அவுஸ்திரேலியா 295 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தன.

இந்நிலையில், 3ஆம் நாள் ஆட்டத்தின் முடிவில் இங்கிலாந்து அணி தனது 2ஆவது இன்னிங்ஸில் 9 விக்கெட் இழப்புக்கு 389 ஓட்டங்கள் குவித்திருந்தது.

4ஆம் நாள் ஆட்டத்தை அண்டர்சன் 8 ஓட்டங்களுடனும், ஸ்ரூவர்ட் பிரொட் 2 ஓட்டங்களுடனும் தொடங்கினர். அண்டர்சன் மேலதிகமாக ஓட்டம் சேர்க்காமல் ஆட்டமிழந்தார். இதையடுத்து 395 ஓட்டங்களுக்கு இங்கிலாந்தின் 2ஆம் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

இதைத் தொடர்ந்து 384 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலியா 2ஆவது இன்னிங்ஸை விளையாடியது.

விக்கெட் இழப்பின்றி 135 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. அப்போது டேவிட் வோர்ணர் 58, உஸ்மான் கவாஜா 69 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆஸி. அணியின் வெற்றிக்கு 249 ஓட்டங்கள் தேவைப்படுகின்றன.




# சச்சினின் சாதனையை சமன் செய்த ஜோ ரூட்!

லண்டன், ஓக. 01

டெஸ்ட் தொடரில் 300 ஓட்டங்களுக்கு மேல் குவித்த வீரர் என்ற சாதனையை 19 முறை படைத்துள்ள ஜோ ரூட், சச்சின் டெண்டுல்கரின் சாதனையை சமன்செய்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட ஆஷஷ் டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது.

இந்த போட்டியின் மூன்றாம் நாளில் இங்கிலாந்து அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் ஜோ ரூட் முதல் இன்னிங்ஸில் 5 ஓட்டங்களும், 2ஆவது இன்னிங்ஸில் 91 ஓட்டங்களும் எடுத்தார். அவர் இந்த தொடரில் 5 போட்டிகளில் ஆடி 412 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இதன்மூலம், இந்தியாவின் சச்சின் டெண்டுல்கரின் சாதனையை ஜோ ரூட் சமன் செய்துள்ளார். அதாவது, டெஸ்ட் தொடரில் அதிக முறை 300+ ஓட்டங்கள் குவித்த சச்சின் டெண்டுல்கரின் (19 முறை) சாதனையை அவர் சமன் செய்துள்ளார். இதற்கு அடுத்த இடங்களில் ராகுல் டிராவிட் (18 முறை), பிரையன் லாரா (18), றிக்கி பொண்டிங் (17), அலெஸ்ரெயர் குக் : 17 முறை

# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிக்க மலர்கிறது புதிய கூட்டு!

## கொழும்பில் கடந்த வாரம் விசேட சந்திப்பு

கொழும்பு, ஒக. 01

**எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு திரட்டும் நோக்கில், பாராளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்சன யாப்பா, நிமல் லான்சா ஆகியோர் தலைமையில் மலரவுள்ள புதிய அரசியல் கூட்டணியின் முதலாவது பொதுக்கூட்டம், 2024 ஜனவரியில் நடைபெறவுள்ளது என தெரியவருகின்றது.**

இது விடயம் சம்பந்தமாக கொழும்பில் கடந்த வாரம் விசேட சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான துமிந்த திஸாநாயக்க, சுசில் பிரேமஜயந்த, லசந்த அழகியவண்ண, நளின் பெர்னாண்டோ, மஹிந்த அமரவீர, பிரியங்கர ஜயரத்ன உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது சமகால மற்றும் எதிர்கால அரசியல் நகர்வுகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன. அவ்வேளையிலேயே முதலாவது கூட்டத்தை ஜனவரி 19 ஆம் திகதி நடத்துவது பற்றி பரிசீலிக்கப்பட்டுள்ளது.

அதுவரை புதிய அரசியல் கூட்டணி குறித்து கிராமங்களுக்கு சென்று மக்களுக்கு தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் 2024 முற்பகுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# மனநலக் காப்பகங்கள் குறித்து விசேட விசாரணை முன்னெடுப்பு

கொழும்பு, ஒக. 01

தேசிய மனநல காப்பகத்தில் தங்கிச் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளின் உரிமைகள் மீறப்படுகிறதா என்பது குறித்து விசேட விசாரணை நடத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

மருத்துவ உதவியாளர்கள் குழுவினால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் நோயாளி ஒருவர் உயிரிழந்தமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்கனவே விசாரணையை தொடங்கியுள்ளது.

அங்கொடை மனநல நிறுவனத்தில் நோயாளி ஒருவரை அடித்துக் கொன்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் நான்கு வைத்தியசாலை ஊழியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அதன் முதற்கட்ட தகவல்களின் இவ்வாறான விசாரணையின் அவசியத்தை உணர்ந்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# போதைப்பொருள் ஒழிப்பு குறித்து விசேட அவதானம்

கொழும்பு, ஒக. 01

போதைப் பொருள் அச்சுறுத்துலை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கு ஒழிப்பதற்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு விசேட கவனம் செலுத்தியுள்ளது.

இதற்கமைவாக, பொறுப்பான நிறுவனங்கள் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையிலான விசேட நாடாளுமன்றக் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைவாக, எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 10ஆம் திகதி குறித்த குழுவின் முன்னிலையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் ஒரு அடிப்படை நடவடிக்கையாக சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் ஒருங்கிணைக்க வேண்டியது அவசியம் என்று அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டின் வியாபித்துள்ள போதைப்பொருள் அச்சுறுத்தலை ஆராய்ந்து அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க பாராளுமன்ற விசேட குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குழுவின் தலைவரான அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற குழுவின் முதலாவது கூட்டத்தில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இலங்கை பொலிஸ், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை, தேசிய புகையிலை மற்றும் மதுபான ஆணையம் உள்ளிட்ட நிறுவனங்கள் நாடாளுமன்ற குழு முன்னிலையில் அழைக்கப்படவுள்ளதுடன் போதைப் பொருள் கட்டுப்பாடு தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருள் அச்சுறுத்தல் தொடர்பிலான தற்போதைய நிலைமைகள் தொடர்பில் அறிந்துக்கொள்வது அவசியம் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். (அ-கே)

# கஞ்சா பாவனை நாட்டில் அதிகரிப்பு

## மருந்து கட்டுப்பாட்டு சபை

கொழும்பு, ஒக. 01

இலங்கையில் சட்டவிரோத கஞ்சா பாவனையில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தேசிய அபாயகரமான மருந்து கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் சட்டவிரோத கஞ்சா பாவனையாளர்களின் எண்ணிக்கை 300,000 இலிருந்து 350,000 ஆக அதிகரித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தற்போது நாட்டில் புகையிலை பாவனையாளர்களின் எண்ணிக்கை 1.5 மில்லியனாக உள்ளதாக சபையின் தலைவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட தேசிய மருந்துக் கொள்கையை உருவாக்குவதற்கான முக்கியமான கலந்துரையாடல் எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# விசேட அதிரடிப்படைக்கு உளவியல் பிரிவு ஆரம்பிப்பு

கொழும்பு, ஒக. 01

வரலாற்றில் முதல் தடவையாக பொலிஸ் விசேட அதிரடிப்படைக்கு என்று உளவியல் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போருக்குப் பின்னரான காலப்பகுதியிலும் பொருளாதார நெருக்கடியான சூழலிலும் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் எதிர்கொண்ட உளவியல் ரீதியிலான அழுத்தங்கள், வேலைப்பளு போன்ற நிலைமைகளை உணர்ந்து அந்த நிலைமைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் அதிகாரிகளின் மனதை வலுப்படுத்துவதே இந்த பிரிவின் நோக்கமாக அமைந்துள்ளது.

உளவியல் சார் கற்றலில் டிப்ளோமாவை முடித்த 16 அதிகாரிகள் இந்தப் பிரிவில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

உளவயில் பிரிவுக்கு உள்வாங்கப்பட்ட அதிகாரிகளில் பிரதான பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் பரிசோதகர்களும் உள்ளடங்குகின்றனர் எனறு தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் தலைமை அதிகாரி மற்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தரவின் யோசனைக்கு அமைய இந்த உளவியல் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. (அ)

# நீச்சல் தடாகத்தில் மூழ்கி 25 வயது இளைஞர் பலி!

கொழும்பு, ஒக. 01

கொழும்பு கடவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பியன்வில பிரதேசத்தில், நீச்சல் தடாகத்தில் மூழ்கி 25 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லுணுகம மண்டாவல பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் பலருடன் இணைந்து நீச்சல் தடாகத்தில் நீராடிக்கொண்டு இருந்த நிலையிலேயே இந்த அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நீரில் மூழ்கியவரை உடனடியாக மீட்டு ராகம வைத்தியசாலையில் அனுமதித்தபோதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரேதப் பரிசோதனைக்காக ராகம வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-கே)

# சில எரிபொருள் நிலையங்களின் நிர்வாகத்தை கையகப்படுத்திய பெற்றோலிய கூட்டுத்தாபனம்!

கொழும்பு, ஒக. 01

சில எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் குறைந்தபட்ச எரிபொருள் இருப்புக்களை பராமரிக்கத் தவறியதன் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் நிர்வாகத்தை கையகப்படுத்தியுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பல விநியோகஸ்தர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆரம்பித்துள்ளது என்றும் எனவே எரிபொருள் நிரப்பு நிலைய வியாபாரிகள் போதுமான இருப்புக்களை பராமரித்து அதற்கேற்ப கொள்வனவுக் கட்டளைகளை வழங்குமாறும் எரிசக்தி அமைச்சர் கேட்டுக் கொண்டார்.



அனைத்து எரிபொருள் நிரப்பு நிலைய விநியோகஸ்தர்களும் போதியளவு இருப்புக்களை வைத்திருக்குமாறு அமைச்சர் விஜேசேகர வலியுறுத்தியுள்ளார். (அ)

# பலத்த காற்று வீசும்!

கொழும்பு, ஒக. 01

காலி முதல் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையானதும், சிலாபம் முதல் மன்னார் மற்றும் கங்கேசன்துறை ஊடாக திருகோணமலை கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடற்பகுதிகளும் கொந்தளிப்பாக காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

குறித்த கடற்பகுதிகளில் மணித்தியாலத்திற்கு, 65 கிலோமீற்றர் வேகத்தில் கடும் காற்று வீசக்கூடும் எனவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் மத்திய மலை நாட்டின் மேற்கு சரிவு பகுதிகளிலும், வடக்கு வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும், திருகோணமலை மாவட்டத்திலும் மணித்தியாலத்திற்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## மகிந்த...

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பாராளுமன்றத்தை கலைத்து உடன டியாக பாராளுமன்றத் தேர்தலுக்கு செல்லுமாறு நான் ஆளும் தரப்பு உறுப் பினர்களுக்கு சவால் விடுக்கின்றேன்.

நாம் தேர்தல்களுக்கு அஞ்சப் போவதில்லை. நாளை தேர்தல் நடந் தால்கூட நாம் முகம் கொடுக்கத் தயாராகவே உள்ளோம்.

மக்கள் இன்று போராட்டங்களில் ஈடுபடுவதில்லை தான். ஏனெனில், வீதிகளில் இறங்கி போராடுவதற்குப் பதிலாக தங்களின் வருமானத்தை உயர்த்தும் வழிகளை பார்க்கலாம் என்றுதான் மக்கள் நினைக்கிறார்கள்.

ஆனால், மக்களிடம் உள்ள கோபம் அப்படியே தான் உள்ளது என்பதை அர சாங்கம் மறந்துவிடக்கூடாது. தற்போது சிலர், ஜனாதிபதித் தேர்தல்தான் அடுத்ததாக வரும் என்று கூறுகிறார்கள்.

கூறும் அவர்களுக்கே தெரியும், பொதுத் தேர்தல் ஒன்று தான் அடுத்து நடைபெறும் என்று. மகிந்த ராஜபக்ஷ என்பவர் விற்க முடியாத குப்பைக் கூடமாகிவிட்டார்.

இனியும் இவரை வைத்து அரசியல் செய்ய முடியாது. ஜனாதிபதியும் விரை வில் வீழ்ந்துவிடுவார். எனவே, தைரியம் இருந்தால் பாராளுமன்றத் தேர்தலுக்கு முகம் கொடுக்க தயாராகுங்கள்.

ஏனெனில், இப்போது மக்கள் தொடர் பாக கவலைப்படும் ஆளும் தரப்பினர், சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக் வெலவுக்கு எதிரான நம்பிக்கையில் லாதத் தீர்மானத்தின்போது அவருக்கு ஆதரவாகத்தான் வாக்களிப்பார்கள்.

மக்களை பாதுகாக்க யார் நடவ டிக்கை எடுப்பார்கள் என்பது இறுதியில் தெரியவரும்-என்றார். (அ)

## சமஷ்டி...

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந் திரன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசியலமைப்பில் தற் போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை முழுமை யாக அமுல்படுத்துமாறு அர சாங்கத்தை வலியுறுத்துவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ் தேசியப் பிரச்னைக்கான அரசியல் தீர்வு, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம், நீண்ட காலமாக தாமதமாகி வரும் மாகாண சபை தேர் தல்கள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவினால் கூட்டப்பட்ட சர்வ கட்சி மாநாடுகள் தொடர்பாக தெளிவு படுத்தும் வகையில் பாராளுமன்ற உறுப் பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளார்.

13ஆவது திருத்தம் இலங்கை அரசியலமைப்பின் ஒரு பகுதியே தவிர, ஒரு தனி இணைப்பு அல்லவெனவும் ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரும் அதனை நிலைநிறுத்துவதற்கும் பாது காப்பதற்கும் சத்தியப்பிரமாணம் செய் துள்ளதாகவும் அரசியலமைப்பின் ஒரு பகுதியை நடைமுறைப்படுத்தாமல் விடு வது அரசியலமைப்பு முழுவதையும் மீறுவதாகவே அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாகாண சபை தேர்தலை நடத்துவ தற்கு தாம் தனிநபர் சட்டமூலம் ஒன்றினை தயாரித்து முன்வைத்துள்ள மையை நினைவுபடுத்தியுள்ள அவர், பாராளுமன்றத்தில் சாதாரண பெரும் பான்மை மூலம் அதனை சட்டமாக்க முடியும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித் தாக சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாடுகளில் மாகாண சபை தேர்தலை இனியும் தாமதிக்காமல் நடத்த வேண் டும் என தெளிவாக ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளதாகவும் இந்த விடயத் தில் தமது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ)

## ரணிலை...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவுடன் மட்டுமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சு வார்த்தைகளை நடத்த வேண்டுமென நாம் அவருக்கு அழைப்பு விடுக்கிறோம்.

நீங்கள் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதர வானவர்கள் ஆயின், இப்போதே தயாரா குங்கள். 2024 ஆம் ஆண்டில் நாம் மீண் டும் மகிந்த ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டுவருவோம்.

நாங்கள் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள். எங்களுக்கு வேறு கட்சி கள் கிடையாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுக்கு நான் இவ்வேளையில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காட்டாட்சியை நாட்டிலிருந்து இல்லாது செய்தமைக்காக.

ஆனால், அதேநேரம் 2024 ஆம் ஆண்டுவரை தான், நாம் அவரை ஜனாதி பதியாக தெரிவு செய்தோம் என்பதை யும் மறந்துவிடக்கூடாது.

2024 இலிருந்து 2029 வரை நாம் அவரை ஜனாதிபதியாக்கப் போவ தில்லை. பொதுஜன பெரமுனவுடன் மட்டும், பேச்சுவார்த்தை நடத்துமாறு நாம் அவருக்கு அழைப்பு விடுக்கிறோம்.

ஏனைய தரப்பினருடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி, தோல்வியடைய வேண்டாம் என்றும் நாம் ஜனாதிபதிக்கு தெரிவித்துக் கொள்கிறோம்-என்றார். (அ)

## அமெரிக்க...

திரும்ப அழைக்கப்பட்டுள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியாகி யிருந்தன.

எனினும் இதுகுறித்து ஆராய்ந்த போது அது வதந்தி என்று தெரியவந் துள்ளது.

அத்துடன், கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகமும், ஜூலி சங்கை திரும்ப அழைக்க அமெரிக்க இராஜாங் கத் திணைக்களமும் எந்த முடிவும் எடுக்கவில்லை எனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி ஜோ பைட னால் 2022இல் ஜூலி சங் இலங்கைக் கான தூதுவராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தேசிய...

தேசிய கீதத்தின் வரிகள் மற்றும் அதன் பின்னணி இசையினை மாற்றி இசைக்கப்பட்டமையானது, நாட்டின் கீர்த்தியையும், அரசியலமைப்பையும் மீறும் செயற்பாடாகும் என சட்ட அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

நான்காவது லங்கா பிறீமியர் லீக் தொடரின் ஆரம்ப விழா கொழும்பு ஆர்.பிரேமதாச விளையாட்டரங்கில், நேற்று முன் தினம் ஆரம்பமானது.

அதில் தேசிய கீதத்தை இசைப்பதற் காக வாய்ப்பு பாடகி உமார சிங்ஹசங் வுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இதன்போது, அவர் பிழையான உச்சரிப்பில் தேசிய கீதத்தை சிங்கள மொழியில் இசைத்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (அ)

## இந்திய...

இன்று முற்பகல் 10.30 மணியளவில் கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின் போதான உறுதிமொழிகள், 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நடத்திய சர்வகட்சிக் கூட்டம் என்பன தொடர்பில் இதன்போது ஆராயப்படும் என்று தெரிகின்றது.

அதேவேளை, இந்தியப் பிரதமருடன் பேச்சு நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கோரிக்கை விடுத்திருந்தனர். இதற்கான ஏற்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்படலாம் என அறியமுடிகின்றது. (அ)

# கோழி இறைச்சி இறக்குமதி செய்வதற்கு அரசு அனுமதி!

கொழும்பு, ஓக. 01

கோழி இறைச்சி சார்ந்த தொழிற் துறைக்கு அவசியமான கோழி இறைச் சியை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ இத னைத் தெரிவித்தார்.

முன்னதாக, ஒரு கிலோ 400 ரூபா என்ற விலையில் விற்பனை செய்யப் பட்டுவந்த கோழி இறைச்சி, தற்போது ஆயிரத்து 400 முதல் ஆயிரத்து 450 ரூபா வரையான விலையில் விற்பனை செய் யப்படுகிறது.

இந்தநிலையில், அவற்றின் விலையை கட்டுப்படுத்துவதற்காக, கோழி இறைச் சியை இறக்குமதி செய்ய தீர்மானித் துள்ளதாக அமைச்சர் நளின் பெர் னாண்டோ தெரிவித்துள்ளார். (அ)

# டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை 56,000!

கொழும்பு, ஓக. 01

நாட்டில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 56,000ஐ தாண்டியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவரை பதிவாகியுள்ள நோயாளர்களில் 50 வீதமானவர்கள் மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், கண்டி, கேகாலை, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களிலும் கணிசமான எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அந்த பிரிவு கூறுகிறது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் டாக்டர் நளின் ஆரியரத்ன, கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் கணிசமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

டெங்கு நுளம்பு பரவும் அபாயம் தொடர்வதாக டொக்டர் நளின் ஆரிய ரத்ன மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# பொது வைத்தியசாலைகளுக்கு செல்வதற்கு மக்களுக்கு அச்சம்

## சுட்டிக்காட்டுகின்றார் ஜீ.எல்.பீரிஸ்

கொழும்பு, ஓக. 01

மக்கள் இன்று பொது வைத்திய சாலைகளுக்குச் செல்லவே அச்சப்படு கிறார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2024, ஓகஸ்ட் மாதமளவில் ஜனாதி பதித் தேர்தலுக்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கவேண்டும்.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு இன்னும் 12 வருடங்களுக்கு நாட்டை ஒப்படைக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

2048 இல் நாடு பாரிய முன்னேற்ற மடையும் என்று இவர்கள் ஒரு கற்ப னைக் கதையைக் கூறுகிறார்கள்.

தற்போதுள்ள மக்களுக்கு அடுத்த 25 வருடங்களில் நாடு எப்படி இருக்கும் என்பது தேவையில்லை.

நாளை உயிருடன் வாழ்வோமா என்பதுதான் இவர்களின் எதிர்பார்ப்ப ாகும். லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் 3 அரை வயது குழந்தையொன்று, கிட்னி பாதிப்பினால் சிசிச்சைப் பெற்றுவந்து, மருந்து இல்லாத காரணத்தினால் மூன்று நாட்களுக்கு முன்னர் உயிரிழந்தது.

போரதானை வைத்தியசாலை, ராகம வைத்தியசாலை போன்ற பல வைத்திய சாலைகளில் மருந்து தட்டுப்பாடு மற் றும் மருந்து ஒவ்வாமையால் பலர் உயிரிழந்தார்கள்.

35 வீதமான குடும்பங்கள், இரண்டு வேளை உணவினை மட்டும்தான் உட் கொள்கிறார்கள் என்று ஆய்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலர் ஒருவேளை மட்டும்தான் உண்கி றார்கள். உணவினை கட்டுப்படுத்தலாம். ஆனால், நோயாளிகளுக்கு மருந்துகளை கட்டுப்படுத்தி வழங்க முடியுமா?

கடந்த 6 மாதங்களில் மட்டும் 64, தரமற்ற மருந்துகளை அரசாங்கம் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி, மீண் டும் அவற்றை திருப்பியெடுத்துள்ளது.

இதனால், மக்கள் இன்று பொது வைத்தியசாலைகளுக்குச் செல்லவே அச்சப்படுகிறார்கள்.

வைத்தியசாலைக்கு சென்றாலே உயி ரிழந்துவிடுவோமோ என்னும் அச்சம் மக்களிடத்தில் ஏற்பட்டுள்ள நிலையில், அடுத்த 25 வருடங்களில் நாடு எப்படி இருக்கும் என்று அரசாங்கம் கதைகளைக் கூறிவருகிறது - என்றார். (அ)

## இலங்கையின்...

உள்ள 13ஆவது திருத்தத்தை வழங்குவதற்கு பாராளுமன்றத்தில் உள்ள எவரது அங்கீகாரமும் தேவையில்லை. ஆனால் எமது ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க 13 ஆவது திருத்தத்தை நிறை வேற்றுவது தொடர்பில் பாராளுமன்றத் தைக் கேட்கவேண்டும் என ஒரு பித்த லாட்டத்தை நடத்தி வருகின்றார்.

எமது சுதந்திரத்துக்கான பொது ஜனவாக்கெடுப்பை கோரும் செயற் பாட்டை ஒரு சில கட்சிகள் மாத்திரமே முன்னெடுத்து வருகின்றன. ஆனால் அனைவரும் இது குறித்து பேசமிடத்து இவ்விடயத்தில் சர்வதேசம் தலையிட்டு ஒரு பொதுசனவாக்கெடுப்பை நடத்தி தமிழ் மக்கள் கேட்கும் சுதந்திரத்தைப் பெறமுடியும்.

13 ஆவது திருத்தத்தை சிங்கள இன வாதிகள் எரித்தார்கள். இதே போன்ற தொரு நிலை மீண்டும் ஏற்பட்டால் இலங்கையின் அரசியல் அமைப்பையே தீயிட்டு எரித்து விட்டு சர்வதேச சமூ கத்தை நோக்கிச் செல்லுகின்ற நிலை ஏற்படும் . ஆகவே இலங்கை அரசு தொடர்ந்து ஏமாற்றுகின்றது என்றால் அதற்கு ஏமாறுபவர்களும் பொறுப் பாளிகள் ஆகின்றனர்-என்றார். (அ)

## முல்லைத்தீவு...

இதன்போது மகாவலி அபிவிருத்தித் அதிகார சபையே நிலங்களை அபகரிக் காதே, எமது நிலம் எமக்கு வேண்டும் என பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட் டன.

அக்கரைவெளியில் 1500 ஏக்கர் காணியை சிங்களவர்களுக்கு பகிர்ந்த ளிக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள் ளதாக தகவல் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu

# ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு - கிழக்கில் மீளப்பெற முடியாத சமஷ்டி தீர்வே தேவை!

## மல்வத்தையில் மக்கள் ஒன்றுகூடி பிரகடனம்






காரைதீவு, ஓக. 01

**ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு மீளப்பெற முடியாததும் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு தீர்வை வழங்கவேண்டும் எனும் மக்கள் பிரகடனம் நேற்று திங்கட்கிழமை மல்வத்தையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.**

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் துரையப்பா காத்தவராயன் தலைமையில் நேற்று மக்கள் ஒன்றுகூடி மல்வத்தை சித்தி விநாயகர் ஆலயமருகில் வைத்து அச்சிடப்பட்ட மக்கள் பிரகடனத்தை உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைத்தனர்.

மக்கள் வரிசையில் நின்று 13 ஆவது திருத்தம் மற்றும் சமஸ்டி தொடர்பிலான பல பதாகைகளை தாங்கிய வண்ணம் குரல் எழுப்பினர்.

"கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கான தீர்வினை நோக்கிய 100 நாள் செயற்பாட்டு திட்டத்தின் இறுதி நாளில் வெளியிடப்பட்ட மக்கள் பிரகடனம் வடக்குக் கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன் நேற்று அதன் ஒருவருட நிறைவில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன்மூலம் தமிழ்பேசும் மக்கள் உட்பட வடக்குக்கிழக்கில் வாழும் மக்கள் கௌரவமாக வாழ வழி சமைக்கும்" எனவும் இணைப்பாளர் துரையப்பா காத்தவராயன் தெரிவித்தார்.

அத்தோடு இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிவில் செயற்பாட்டாளர்கள் சமூக நலன்விரும்பிகள் பெண்கள் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர்கள் யுவதிகள் 500 க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளையும் முன்வைத்தனர். (அ)

# சமஷ்டித் தீர்வை வலியுறுத்தி திருமலையிலும் போராட்டம்!



திருமலை, ஓக. 01

தமிழ் மக்களுக்கு சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை வலியுறுத்தி, நேற்று திருகோணமலையிலும் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் தமிழ்பேசும் மக்களுக்குரிய நிரந்தர அரசியல் தீர்வான சமஷ்டியை வலியுறுத்தி நேற்று திருகோணமலை மக்ஹெய்சர் மைதானத்திற்கு முன்பாக குறித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நிரந்தர அரசியல் தீர்வை நோக்கிய செயல்முனைவின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் இந்த ஜனநாயகப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (அ)

# உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு கோரி வவுனியாவிலும் மக்கள் கூடி ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஓக. 01

கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனும் தொனிப்பொருளில் வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினால் வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில ஈடுபட்டோர் வடக்கு-கிழக்கில் நிரந்தரமான அரசியல் தீர்வை வலியுறுத்தியதுடன், ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வொன்றை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் என்ற பிரகடனத்தை முன்வைத்தனர்.

அத்துடன் கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும், கௌரவமான உரிமைகளுக்கான மக்களின் குரல், வடக்கு-கிழக்கில் அதிகார பரவலாக்கம் என்பது ஜனநாயக உரிமையாகும் போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தி அவர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். (அ)



# வவுனியாவைச் சேர்ந்த குடும்பம் நேற்று காலை தமிழகத்தில் தஞ்சம்



சென்னை, ஓக. 01

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக புகலிடம் தேடி இலங்கை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தவர்களான 4 பேர் அகதிகளாக படகில் புறப்பட்டு தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையை நேற்று திங்கட்கிழமை காலை சென்றடைந்தனர்.

தகவல் அறிந்த தமிழக கடற்படையினர் அவர்களை மீட்டு மண்டபம் மரைன் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறு தஞ்சமடைந்தவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன்,மனைவி மற்றும் இரு பிள்ளைகள் என தெரிய வந்துள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகம் வந்தவர்களின் எண்ணிக்கை 269 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் கடும் வறட்சி!

கொழும்பு, ஓக. 01

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் கடுமையான வறட்சியான காலநிலை நிலவி வருவதுடன், நீர்த்தேக்கங்களின் நீர்மட்டங்களும் குறைந்துள்ளன.

அத்தியாவசிய தேவைக்கு மாத்திரம் தண்ணீரை பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பொதுமக்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

உடவலவ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளதால் சமனவலவ நீர்த்தேக்கத்திலிருந்து உடவலவ நீர்த்தேக்கத்துக்கு நீரை விநியோகித்தால் 3 மணித்தியாலம்வரை மின்சாரத் துண்டிப்பை மேற்கொள்ள நேரிடும் என மின்சார பொறியியலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலையால் வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்கள் அதிகமாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

இந்த மாகாணங்களில் மழை வீழ்ச்சியால் நிரம்பும் 6000 குளங்கள்வரை மழை இன்மையால் வறட்சிக்கு உள்ளாகியுள்ளன. உடவலவ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் பாரியளவு குறைந்துள்ளதால் 50,000ம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்படும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

அநுராதபுரம், பொலனறுவை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள குளங்களும் வற்றியுள்ளன.

மின்னேரியா நீர்த்தேக்கத்தின் பொறியியலாளர் அசேல உதயங்க கருத்து வெளியிடுகையில் -

"கடந்த ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் கடுமையாக வறட்சியான காலநிலைக்கு முகங்கொடுத்துள்ளோம். முடிந்தளவு நீரை சேமித்துக்கொள்ளுமாறுதான் வானிலை அவதான மையம் மற்றும் துறைசார் நிறுவனங்களிடமிருந்து அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன"-என்றார். (அ)

# பேராதனைப் பல்கலையின் 70 இற்கும் மேற்பட்ட விரிவுரையாளர்கள் நாட்டிலிருந்து வெளியேற்றம்

கொழும்பு, ஓக. 01

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கடந்த 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இந்த ஆண்டு மே மாதம் வரை 70க்கும் மேற்பட்ட விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய அனுபவமிக்க விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் வெளியேறியதன் காரணமாக அந்தப் பல்கலைக்கழகத்தின் பல பீடங்களில் அன்றாடக் கற்கைகளை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரதி துணைவேந்தரும் ஊடகப் பேச்சாளருமான பேராசிரியர் டபிள்யூ.எம். டெரன்ஸ் மதுஜித்,

"பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறிய பேராசிரியர்கள் வெளிநாடு சென்றது உண்மைதான். இந்நிலை மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம் மற்றும் பல் மருத்துவ பீடங்களையே பிரதானமாக பாதித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் இவ்வருடம் மே மாதம் வரையான 16 மாதங்களில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னணி வைத்தியர்கள் மற்றும் பேராசிரியர்கள் 70 பேர் பல்கலைக்கழகத்தை முழுமையாக விட்டு வெளியேறி வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். ஏராளமானோர் கல்வி விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ளனர்" என தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.